விலை ரூபா 1-00

# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 20-3-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 25

UNIVERSITY OF SRI LANKA JAFFNA RECEIVED 1981-3-25 PERIODICALS DIVISION LIBRARY

**விரைவில் எதிர்பாருங்கள்!**

அரசியல் துறையில் இரட்டை கலாநிதிப் பட்டம் பெற்ற திரு. ஜெயரத்தினம் வில்சன் அவர்கள் 'மாவட்ட அபிவிருத்திச்சபை' பற்றி எழுதிய ஆராய்ச்சி கட்டுரைகள் 'உதயசூரியன்' இதழில் விரைவில் வெளிவரவிருக்கின்றன!

# 'உத்தமர்' ஜே. ஆர். ஆட்சியில்...

# இரண்டாவது முறையும் இன சங்காரமா?

## தமிழ்மக்கள் உள்ளத்தைத் தகிக்கும் கேள்வி!

ஆடி அடங்கிக் கொண்டிருக்கும் யு. என். பி ஆட்சியை பாடையிலே ஏற்றி குடமுடைத்து கொள்ளி வைக்க வேண்டிய நேரம் வந்து விட்டதே என குமுறிக் கூத்தாடும் இலங்கையின் 'தர்மவாளன்' ஜே. ஆர். குறுக்கு வழியிலாவது செத்துக் கொண்டிருக்கும் பிணத்துக்கு சீவன் கொடுக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறர் என்பதையே அவரது யாப்பசூவ தேர்தல் தொகுதிப் பேச்சு சுட்டிக்காட்டுகிறதா?

பழைய காலத்து ரோமாபுரி ராணிகளாக- படாடோப வாழ்க்கையில் பிரென்சு நாட்டைப் பாழடித்த 16-ம் லூயிஸ் மன்னனுக- இந்தோனேஷியாவின் சுகர்னோவாக. இலங்கையைச் சீரழித்து சின்னுபின்னமாக்கிவிட்ட ஜே. ஆர். அதிலிருந்து தப்பிப் பிழைக்க தாம் எப்போதும் ஆயத்தமாகவே வைத்திருக்கும் சிங்கள இனவாதப்பேய்க்கு உருக் கொடுப்பதிலேயேதற்போது முனைந்திருக்கிறரா?

ஏழை- நடுத்தர மக்களை வாட்டி வதைக்கும் முதலாளித்துவ ஆட்சியை எதிர்ப்பதற்காக ஒன்றுபட்டிருக்கும் ஐந்து கட்சிகளின் கூட்டு- சிங்கள இனத்திற்கு விரோதமானதென ஒரு [illegible] பிரச்சாரத்தை அவர் மேற்கொண்டு வருகிறரா?

இப்படி- பல வேறுவிதமான கேள்விகள் ஈழத்தமிழர்களின் உள்ளங்களில் விஸ்வரூபம் எடுத்துக்கொண்டிருக்கின்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

### பாடசாலைகளைச் சீரழிக்கும் அமைச்சர் பட்டிருப்பிலும் திக்விஜயம்

சென்ற வாரம் எவரும் எதிர்பாராமல் பட்டிருப்புமகாவித்தியாலத்துக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்ட ஓர் தமிழ் அமைச்சர் பாடசாலை அபிவிருத்தி சங்க அங்கத்தவர்களின் கேள்விகளினுல்திக்குமுக்காடிப்போனுர். இம்முறை தமிழ்மாணவர்கள் குறைவாகவேபல்கலைக்கழகத்துக்குஅனுமதிக்கப்பட்டுள்ளது பற்றித் தாங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்ளென வினவப்பட்டபோது இவ்விடயத்தை முன்னதாகவே நீங்கள் சொல்லியிருந்தால் ஏதும்செய்திருக்கலாம்'' என்று கூறிச் சமாளிக்க முயன்ருராம் அமைச்சர் பெருமான்.

## இதற்கும் அதற்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

தமிழீழத் தீவிரவாதிகளின் பிரச்சார ஏடு என வர்ணிக்கப்படும் சுதந்திரன் (11-3-81) ஏட்டின், 2 ம்பக்கத்தில் கூட்டணியின் கொள்கை எது என்ற தலைப்பில் வெளியான சிறு கட்டுரையின் கடைசிப் பகுதியில்--

தமிழினத்தின் தன்மானத்தை -- விடுதலை வேட்கையைத் துச்சமென கருதிப் பச்சை மாலை அணிந்து பிரேமதாசாவோடு பவனிவந்த பா. உவையும், பா. உ. பரிவாரங்களையும் தேர்தல் யாத்திரையின் போது கிழியக் கிழியக் கேட்பதற்கு நொந்துபோன இளைஞர்கள்காத்திருக்கிறர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வாசகத்திற்கும் 14-3-81சனிக்கிழமைஇரவு கரவெட்டியில் ஒழுங்கு செய்யப்பட்ட கிரர்மயாத்திரைக் கருத்தரங்கை சிலர் குழப்பியதற்கும் ஏதாவதுதொடர்புஇருக்குமா?

இதைப்போலவே அதே நாள் இரவு 8 மணியளவில் வல்வெட்டித்துறையில் மானிப்பாய் ப்ா. உஇன் ஜீப் வண்டிக்கு தீ வைக்கப்பட்டதற்கும் இதற்கும்ஏதாவது சம்பந்தம்இருக்குமா?

தீவைப்புச் சம்பவம் ஒரு திட்டமிட்ட செயல் என பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. மகேந்திரன் கருத்துத் தெரிவித்துள்ளது பொதுமக்கள் மனத்தில் மேலும் பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

### சுதந்திரனின் 'சொத்தை'வாதம்

கூட்டணிப்பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உத்தியோக முத்திரையுடன் 'உதயசூரியன்' பத்திரிகை ஓசியில் அனுப்பப்படுவதால்-- அதை கூட்டணிப்பாராளுமன்ற அணியின் பத்திரிகை என்று குறிப்பிடுகின்றேன். என கோவைமகேசன் தனது பத்திரிகையில் (சுதந்திரன், 15-3-81) எழுதியுள்ளார்--அவரது வாதத்தின்படி அது சரியென்ருல்-

கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக (இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை) உடுப்பிட்டி இராசலிங்கத்தின் தொலைபேசியை ஓசியில் உபயோகித்ததினுல் -- சுதந்திரன் பத்திரிகை, கூட்டணிப் பாராளுமன்ற அணியின் பத்திரிகையாகவே விளங்கியது என திரு. கோவை மகேசன் தாமாகவே ஒப்புக் கொள்ளுகின்ருரா?

ஒப்புக் கொண்டால் -- சுதந்திரன் ஏட்டின் உரிமையாளர் யார்?

ஒப்புக் கொள்ளாவிடில்-- 'உதயசூரியன்' பத்திரிகை கூட்டணிப்பாராளுமன்ற அணியின் பத்திரிகை என்னும் அவரது வாதம் 'சொத்தை' என்பது நிரூபணமாகின்றது



சாவகச்சேரித் தொகுதி கிராம யாத்திரையின்போது செல்வன் கு. உதயகுமார் தலைமையில் பாரதி சனசமூகநிலையத்தில் நடந்த கருத்தரங்கில் சாவகச்சேரி பா. உ.. பொதுமக்கள் புடைசூழ நின்று கொண்டிருப்பதையும், தலைவர் அமிர் உரையாற்றுவதையும் இங்கே காணலாம்.

### 'இந்து'ஏடு எழுதுகிறதாம்!

பிராமணர்களின் பேராதரவுடன் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் 'இந்து' ஆங்கில நாளேடு, தினமணி போன்றவை பேரறிஞர் அண்ணு, பெரியார் ஈவேராவின் கருத்துக்களை இன்றும் கடுமையாகச் சாடி எழுதிவருகின்றன.

ஈழத்தமிழரின் தமிழ்நாட்டுக் கோரிக்கைக் கெதிராக இந்த ஏடுகள் வரிந்துகட்டிக் கொண்டு செய்யும் பிரச்சாரமும் நமக்குத் தெரியும். இந்தப்பிரச்சாரத்தின் ஒருபகுதியாகவே-தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பலவீனப் படுத்தும் ஒரே நோக்கத்தோடு, 'தமிழீழம்' த. வி. கூட்டணியின் தந்திரமே யன்றி கொள்கை அல்ல என்று அண்மையில் அது எழுதியது.

'இந்து' வின் எண்ணத்தை நன்கு தெரிந்திருந்தும் அதன் செய்திக்கு தமதுபத்திரிகையின் முன்பக்கத்திலே முக்கியத்துவம் கொடுத்திருக்கும் கோவை மகேசன் தற்போது எங்கே யார் பக்கம் இருக்கின்ருர் என்பதை தமிழ்மக்கள் இனியாவது புரிந்து கொள்வார்களாக!

### ஜனதிபதி - அமிர் சந்திப்பு

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக தலைவர் அமிர் ஜனதிபதி ஜே. ஆரைச் சந்தித்து ஒரு மகஜரையும் கையளித்துள்ளார்.

1979ம் ஆண்டு ஏப்ரல், ஆகஸ்டு மாதங்களில் நடைபெற்ற க. பொ. த. (உயர்) பரீட்சைகளின் புள்ளி விபரங்கள் ஒன்றிணைந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு இம்முறை பல்கலைக்கழக அனுமதி மேற்கொள்ளப் பட்டிருப்பதால், ஏப்ரல் பரீட்சைக்குத்தோற்றியமாணவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(இந்தியா தவிர்ந்த)
வெளிநாடுகளுக்கான சந்தா
25 அமெரிக்கன் டொலர்கள்

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையைத் தேடி...

## குறுங் காவியம்.

(இழந்த தாயகத்தை மீட்கப் போராடும் இளைஞர்களில் இளங்குமரன் முன்னணியில் திகழ் பவன். விடுதலைக்காக உழைப்பதைத் தவிர வேறொரு பாவமும் அறியா அந்தக் காளையை 'பயங்கரவாதி' எனக் குற்றம் சாட்டி சிங்கள இனவெறி அரசாங்கம் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துகின்றது. அங்கே...)

### குற்றவாளிக் கூண்டிலே!

நெடும் மன்றம்! மக்கள் கடல்
நிறைந்திருக்கும்! நீதிபதி
இடும் தீர்ப்பு என்ன வென்று
எதிர்பார்க்கும்! கண்களெல்லாம்
படும் அந்த முக மொன்றே
பரபரப்பின்றி யவன்
நெடுங் குன்றம் போல எதிர்
நிற்பானே! அச்சமில்லை!

அரிமாவே அவன் தோற்றம்!
அனல் வீசும் கண்ணிரண்டு!
எரிமலையே அவன் உள்ளம்
எக்கணமும் வெடித்து எழும்
கரிபோல முகம் தோன்றும்
காவலர்கள் இரு பக்கம்....
மரியாதை இது போல
மனிதர் யார் பெற்றதிங்கே?

கூண்டுதனில் நிற்குமிளம்
குமரனவன் பார்த்துத்தன்
நீண்ட தொரு தீர்ப்புதனை
நீதிபதி வாசிப்பார்!

தூண்டி பொது மக்கள் தமை
'தூக்கி எறி' அரசை யென
வேண்டி பெரும் பிரச்சார
வெறி எங்கும் ஏற்றியுள்ளான்!

நாடுதனைப் பிரிக்கு மொரு
நச் செண்ணம் மிக்கதினால்
கேடுபல செய்துள்ளான்
கிளர்ச்சி என்னும் பயிர் வளர
வீடுஎலாம் தன் கொள்கை
விதை தன்னைத் தூவியுள்ளான்
பாடுமிவன் பாட்டெல்லாம்
பயங்கரமே! இனத்துவேஷம்!

அரசியற்றும் சட்டமெலாம்
அலட்சியமாய் அள்ளிப் போய்
எரிதியில் போட் டெரித்தான்
என் வயிறு குளிர்ந்த தென்றான்
மரம் போலே வாழும் பல
மனித ரெலாம் இவன் செயலால்
உரம் பாய்ந்தார்! உருக்கே தான்!
உறுமுமொரு புலிக் கூட்டம்!

குண்டெறிந்து அதிகாரி
குடும்பத்தை அழித்துள்ளான்
குண்டர் படை திரட்டி பல
கொலை கொள்ளை வடகிழக்கில்
கண்டபடி செய்துள்ளான்
கை நிறையச் சாட்சியங்கள்
உண்டிதனால் என் தீர்ப்பை
உரைக்கு முனம் நீ என்ன,

கூறுகின்றாய் என்றந்தக்
கொடும் வரியை அவர்கேட்க
சீறுகின்றான் அவன் பாம்பாய்
சிறிதும் நான் மறுத்தேனா?
வீறுகொண்டே என் நாட்டின்
விடுதலைக்கே மிக உழைத்தேன்
மீறுமொரு குற்றமிதில்
மேன்மை யோரே! நான் காணேன்!

எத்தனையோ குற்றமென
எடுத்துரைத்தீர்! ஏற்கின்றேன்!
அத்தனையும் செய்தேன் நான்
அன்னை விலங் கொடித்திடவே!
பித்தன் நான் இல்லை அய்யா
பிறந்த பொன்னாட்டிற்காய்
முத்தமிட தூக்கு மேடை
முன்வந்தேன்! மணப் பெண்ணே!

என்று அவன் இடி இடித்து
ஏறு என சபை நடுவே
நின்றிருந்தான்! மக்களெல்லாம்
நெஞ்சமது அதிர்ந்திருந்தார்
'நன்று' என நீதிபதி
நம் நாட்டின் கரிபால்டி
கொன்றுவிடும் தீர்ப்புதனைக்
குறித்துவிட்டு எழுந்தாரே!

தீர்ப்புதனைக் கேட்டந்த
திருமகனின் அன்புத்தாய்
மூப்புதனை அடைந்த நிலை....
மூர்ச்சித்து விழுந்திடுவாள்
காப்பணிந்த கையழகி
காளையவன் காதற் பெண்
தீப்பிடித்த வீடு என
திகழ்ந்திடுவாள்; துன்பவெள்ளம்!

அவையெல்லாம் ஆடிப்போம்
அருந்தமிழே மூச்சு என
குவலயத்தில் வாழ்ந்த மகன்
கூண்டுதனை விட்டிறங்கி
கவலை யென்பதறியானாய்
காவலர்கள் புடை சூழ
தவச் சாலை சென்றிடுவான்
தாள் பணிந்து வணங்கோமோ?

(வளரும்)

கவிஞர் வாகரைவாணன்

---

# இதில் வருவது பதில்.

**க. நித்தியானந்தன்**
**கொழும்பு**

கே: சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசனை பத்திரிகையின் உரிமையாளரால் கட்டுப்படுத்த முடியாத தேன்?

ப: மகேஸ்வரன் பிடிக்குள் 'சந்திரன்' அடக்கம் என்ற புராணக்கதை கூட உங்களுக்குத் தெரியாதா?

✲ ✲ ✲

**இ, சோதிலிங்கம்**
**கோண்டாவில் மேற்கு**

கே: பாராளுமன்றத்தில் 'அடிதடி' ஏற்படும் அளவுக்கு சில சமயங்களில் வார்த்தைப் பிரயோகங்கள் நடைபெறுகின்றனவே!

ப: ஆளும் கட்சியினர் தங்கள் மிருகப்பலத்தை (பெரும்பான்மைப் பலத்தை) அங்கும் காட்ட விரும்புகிறார்களோ, என்னவோ?

✲ ✲ ✲

**க. சிவநாயகம்**
**மட்டக்களப்பு**

கே: பணவீக்கம் என்றால் என்ன?

ப: ஏழை - நடுத்தர மக்களிடம் அரசாங்கம் அடிக்கும் பகற்கொள்ளையே பணவீக்கம் என்கிறார் ஒரு பொருளாதார அறிஞர்.

✲ ✲ ✲

**வே. தங்கவேலாயுதம்**
**யாழ்ப்பாணம்**

கே: தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் கருத்தரங்குகளில் குழப்பமேற்படுத்த முயன்று படுதோல்வி அடைந்தவர்கள், இம்மாதம் 31ம் திகதிக்குப்பின் பார்ப்போம் என்று சொல்கிறார்களாமே, ஏன்?

ப: இதை நீங்கள் சுதந்திரன் ஆசிரியரிடம் ஏன் கேட்கக்கூடாது? 31-3-81 முதல் 26-4-81 வரை தந்தை செல்வா நினைவுக் கருத்தரங்குகளைத் தமிழீழமெங்கும் தீவிரவாதிகள் நடத்துவார்களென அவர் தமது பத்திரிகையில் விளம்பரப்படுத்தியிருக்கின்றார். இதற்கும் அதற்கும் இடையில் ஏதாவது இருக்குமோ?

✲ ✲ ✲

**இ. சண்முகநாதன்**
**கொக்குவில்**

கே: அடுத்த இரண்டுஆண்டுகளில் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஏதும் நடைபெறாது என அரசாங்கம் அறிவித்திருப்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்.

ப: அறிவிப்பு தமிழ்ப்பகுதிகளுக்கு மட்டுந்தானே! என்றாலும் பரவாயில்லை- அடிக்கல்லுகளின் எண்ணிக்கையாவது குறைந்து போகட்டும்.

✲ ✲ ✲

**க. சிவப்பிரகாசம்**
**திருகோணமலை**

கே: கற்பனை நயம் மிக்க ஒரு கவிதையைக் குறிப்பிடுங்கள் பார்க்கலாம்!

ப: தமிழில் பல உண்டு. என்றாலும், கோடைகாலம் பற்றி மகாகவி காளிதாசன் வர்ணித்த பாடல்களில் ஒன்று இப்போது எனது நினைவுக்கு வருகின்றது.

புழுக்கம் காரணமாக வீட்டு மாடியில் போய்ப் பெண்கள் படுத்துத் தூங்குகிறார்கள். இடையில் விழித்துக் கொண்ட அப் பெண்கள் நழுவிப்போன தங்கள் ஆடைகளை சரி செய்வதாக எண்ணிக் கொண்டு (நித்திரை மயக்கத்தில்) நிலவின் கதிர்களையே தம் ஆடை என்றெண்ணி, அவற்றைத் தாவிப்பிடிக்க முயல்கின்றனராம்.

கற்பனை நயம்மிக்க இப்பாடலை வடமொழியிலேயே நான் படித்த போது காளிதாசனின் கற்பனாசக்தியை மானசீகமாக வணங்கி நின்றேன்.

✲ ✲ ✲

**இ. சிவசோதி**
**யாழ்ப்பாணம்**

கே: தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்களின் முன்னிலையிலேயே யாழ்- பல்கலைக்கழக மாணவன் குத்தப்பட்டான் எனச் சிலர் சொல்லுகிறார்களே- இதற்கு உங்கள் விளக்கம் என்ன?

ப: இது அப்பட்டமான பொய்ப் பிரச்சாரம்! தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் மீது சேற்றை வாரி இறைக்க சில சக்திகள் திட்டமிட்டுச் செய்யும் கேவலமான நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. தலைவர் சிவாவும் யாழ்- பா- உ. திரு. வெ. யோகேஸ்வரனும் யாழ்- வளாகத்தினுள் இருந்து, மாணவர் சம்பந்தமான வேறு சில உடனடிக் கடமைகளில் ஈடுபட்டிருந்தபோது, வெளியே நடைபெற்ற இந்தத் துக்ககரமான நிகழ்ச்சியை எப்படியோவெல்லாம் திசை திருப்ப முனையும் அந்தச் சக்திகள் மட்டில் தமிழ்மக்கள் மிக மிக விழிப்பாக இருக்க வேண்டும்.

---

# தமிழர்களின் ஒரே விடுதலை இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியே!

வடபகுதியின்பல்வேறுப்குதிகளிலும் உள்ள கிராமங்களுள் சங்கானைப் பட்டினசபைப் பகுதியில் இருக்கும் நிற்சாமமும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இப்போதைய த. வி. கூட்டணி அன்றைய தமிழரசுக்கட்சியே அந்நிலையில் நிற்சாமத்தில் கிட்டத்தட்ட 40வீதமளவில் மட்டும் தான் தமிழரசுக்கட்சிக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. மிகுதி இடதுசாரி இயக்கத்திற்கே இருந்தது என்பதில் எதுவித ஐயமுமில்லை. ஆனால் இன்று நிற்சாம மக்களின் கருத்துக்கள் முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. வளர்ந்துவரும் இளம் மாணவ சமுதாயம் அறிவியல்ரீதியில் முன்னேறிக் கொண்டு வருகிறது.

மக்களின் பூரண அறிவியல் ரீதியில் புதியசமுதாய அமைப்பில் வளர்ந்துவரும் கிராமங்களுள் நிற்சாமமும் ஒன்றாகும். அந்த அறிவியல் நோக்கில் தான் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது சில கருத்துக்களை முன்வைத்து 94வீதமான மக்கள் த. வி. கூட்டணிக்கு ஆதரவளிக்க முன் வந்தனர்.

இடதுசாரித் தலைவர் ஒரு சிலர் தங்கள் சுயநலங்கருதி நிற்சாம மக்கள் சிலரை பிழையான திசைக்கு அழைத்த சம்பவங்கள் பல உண்டு. சிலரை தற்போது அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள். விஷயம் புரியாத அப்பாவி ஏழைமக்கள் அவர்கள் பின் சென்று மட்டுமல்ல, தங்கள் உடைமைகளையும் இடதுசாரித் தலைவர்களுக்கு அர்ப்பணித்த சந்தர்ப்பமும் பல உண்டு.


இடதுசாரிகளைப் பின் தொடர்ந்து நின்ற சிலர் பனிப் புலத்திலும் இருவரும், சுழிபுரத்தில் ஒருவரும், நிற்சாமத்தில் மூவர் இருந்தால்போல் இடதுசாரித் தலைவர்களினால் எதையும் சாதிக்க முடியாது என்று ஒரு முடிவுக்கு வந்துள்ளார்கள். இதன் அடிப்படைக் காரணத்தினால் தான் நிற்சாமக் கிராம மக்கள் அனைவரும்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போலி 'இடது'களின் போக்கை புரிந்துகொள்ள வேண்டாமா?



சில தினங்களுக்கு முன் யாழ்பல்கலைக் கழகத்தில் நடந்த ஓர் சம்பவத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக மாணவர் சமுதாயத்தைத் தூண்டி விடுவதற்குச் சில பொறுப்பற்ற இயக்கங்கள் எடுத்து வரும் முயற்சி அவர்களின் சுயரூபத்தை அம்பலப்படுத்தி விட்டது. சில மாதங்களாகவே இந்தச் சக்திகள் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் இளைஞர் சமுதாயத்துக்குமிடையில் ஓர் இடைவெளியை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வந்திருக்கின்றன. இச்சக்திகளையும் அவற்றின் இனவிரோதச் செயல்களையும் இலட்சிய இதயங்கள் அடையாளங் கண்டு கொள்ளவேண்டியது அத்தியாவசியமாகும்.

எந்த விடுதலை இயக்கத்திற்கும் உயிர்ச்சக்தியாக விளங்குபவர்கள் இளைஞர்களே, தமிழ் இனத்தின் விடுதலைப்போரிலும் முன்னணியில் ஆரம்பத்திலிருந்து திகழ்ந்து வருபவர்கள் இளைஞர்களே. சென்ற அரசின் ஆட்சியில் தமிழ் இளைஞர் சமுதாயம் அவ்வரசுக்கு ஆதரவாக இயங்கிய சில போலி இடதுசாரிகளை இனங் கண்டு ஒதுக்கி வந்தது. அதற்குமுன் இளைஞர்களில் கணிசமான தொகையினர் இந்த இடதுசாரி இயக்கங்களின் வலைக்குள் சிக்கியிருந்தார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணி விஞ்ஞான சோஷலிச பொருளாதாரக் கொள்கையையும் இனவிடுதலைப் புரட்சிக் கொள்கையையும் ஒருங்கிணைத்து செயற்பட்ட காரணத்தினுல் இளைஞர்கள் கூட்டணிபால் ஈர்க்கப்பட்டனர். முந்திய அரசின் சிங்களப் பேரின வாதத்திற்குத் தம்மை அடிமைப்படுத்தி விட்ட இவ்விடதுசாரி சக்திகள் செல்வாக்கிழந்து தமிழ் இனத்தில் இடம்பெற முடியாது போய் விட்டன. தாம் மீண்டும் தமிழ்இளைஞர் மத்தியில் தலைதூக்க வேண்டுமாயின் தமிழர் விடுதலைக் கூட்டணியை இளைஞர் மத்தியில் ஓர் மிதவாத இயக்கமாக, முதலாளித்துவ இயக்கமாகத் தோற்ற வைத்துத் தாம் இன விடுதலையிலும் தீவிர ஈடுபாடு கொண்டவர்களாக நடிக்கவேண்டுமென்பதை அவர்கள் உணர்ந்தனர். மாவட்ட அபிவிருத்திசபைகள் பற்றி இயக்கத்தில் எழுந்த கருத்து மோதலை இச் சக்திகள் முழுதாகப் பயன் படுத்திக் கொண்டார்கள்.

முந்திய அரசாங்கத்தின் தமிழ் மாணவருக்கெதிரான தரப்படுத்தலை நியாயமானதென்று அறிக்கை விட்ட சக்திகள், தமிழ் இளைஞர்களை விசாரணையின்றி பல வருடங்களாகச் சிறையில் அடைத்து வைத்த சிறிமாவோ அரசின் செயலுக்குத் துணை நின்ற சக்திகள், தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த படுகொலை பற்றி வாய்திறவாத இயக்கங்கள்- மாவட்ட அபிவிருத்திச்சபை பற்றிய பெரும்பான்மை அறிக்கை வெளிவந்தவுடன்- சட்டம் வருவதற்குமுன்பே- அதற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கின. இன்னும் உருப்பெருத அமைப்பைப் பற்றி ஆய்வரங்குகள் நடாத்தி ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிட்டன. கடந்த அரசின் காலத்தில் இவர்களிற் சிலர் மேற்கொண்ட இனவிரோத நடவடிக்கைகளை அறியாத மாணவர் சமுதாயத்தின் முன் அதி தீவிர தமிழ் ஈழ வாதிகளாகத் தம்மைக் காட்டிக்கொண்டனர். தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கும் நம்மவர் சிலரும் இந்தப் பொறிக்குள் விழுந்தனர். இந்தப்போலி ஆராய்ச்சி உரைகள் நமது இயக்க ஆதரவாளர் மத்தியிலும் அந்த ஏடுகளால் நடமாட விடப்பட்டன.

சர்வதேச ரீதியாக இந்தச் சக்திகளின் ஊடுருவல் தந்திரத்தை உணராத நம்மவர்கள் சிலர் அவர்களைத் தீவிர விடுதலைவீரர்களாகக் கருத முற்பட்டனர். தமிழ் ஈழத் தீவிரவாதிகள் என்ற போர்வையில் தமிழ் இளைஞர்களில் ஒருபகுதியினரை விடுதலை இயக்கத்திலிருந்து பிரித்து இயக்கத்திற்கும் அதன் தலைமைக்கும் விரோதமான நிலைப்பாடு கொள்ளச் செய்வதில் ஓரளவு வெற்றியுங்கண்டனர். இதன் விளைவாகவே யாழ் பல்கலைக் கழகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மாருக - தமிழ் இன விடுதலையின் சின்னமாகிய உதயசூரியன் கொடியையும் சேர்த்துத் தீயிடும் சம்பவம் இடம் பெற்றது. பல்கலைக்கழக மாணவர்களில் மிகப் பெரும்பாலோர் இன ஒற்றுமையைக் குலைத்து இனத்தைக் காட்டிக்கொடுக்கும் இச்செயலை ஏற்றுக் கொள்ளவில்லை. மாணவர்கள் பலர் பின்பு நடந்த இயக்கக் கூட்டத்தில் இச்செயலையொட்டித் தம் கண்டனத்தை வெளிப்படையாகத் தெரிவித்தனர். ஆனல் அக்கூட்டத்தில் பேசப்பட்ட சில பேச்சுக்களைத் திரித்தும் பொய்களைச் சேர்த்துக் கூறியும் மாணவசமுதாயத்திற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே மேலும் பிளவை ஏற்படுத்த இச் சக்திகள் முயன்றன. அங்கு தம்பி ஆலாலசுந்தரம் யாரோ பஸ் நிலையத்தில் ஆத்திரத்தில் கூறிய விடயத்தைக் குறிப்பிட்டதை வைத்து அவர் மாணவர் சமுதாயத்தை அவமதித்து விட்டார் என்று குரல் எழுப்பினர். தலைவர்களுக்கு எதிராக சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக மிரட்டினர். எம்மைச் சந்திக்க வேண்டுமென்று மாணவர் மன்றத்தினர் கோரியபோது தலைவர் சிவசிதம்பரம் பல தொல்லைகளுக்கு மத்தியிலும் நேரம் ஒதுக்கிக் கட்சி அலுவலகத்தில் தன்னையும் என்னையும் சந்திக்கலாம் என்று அறிவித்தார். அந்தக் கடிதம் மற்றைய மாணவர்களுக்குக் காட்டப்பட்டதோ தெரியாது. அதற்கு எவ்வித பதிலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. எம்மைச் சந்தித்து தவருன கருத்துக்கள் நீங்கி மாணவர்களில் பெரும்பாலோர் தெளிவான விளக்கத்தைப் பெறுவதைத் தடுக்கும் பொருட்டே இச் சந்திப்புத் தவிர்க்கப்பட்டதென்பதை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

சமீபத்தில் நடைபெற்ற சம்பவம் எப்படி ஆரம்பமானதென்பதையொட்டி ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகள் கிடைத்துள்ளன. சரியாகத் தெரியாத ஒன்றைப்பற்றி நான் எவ்வித கருத்தும் கூறுவது முறையல்ல. ஆனல் சங்கிலித் தொடராகக் காணப்படும் பல சம்பவங்களில் இரண்டு மாத்திரம் எல்லை கடந்தவையாகப், பாரதூரமானவையாக, தமிழ் மக்கள் என்ற முறையில் நாம் வெட்கப்படவேண்டியவையாக உள்ளன. யாழ்பல்கலைக்கழகத்தின் அருகாமையில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் கடை தீக்கிரையாக்கப் பட்டதும், எல்லாம் சமாதானப் படுத்தப்பட்டபின் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் கத்திக்குத்துக்கு ஆளானதும் கண்டிக்கப் படவேண்டிய நிகழ்வுகளாகும். திருநெல்வேலியும் அதன் சுற்றுடலும் பண்பட்ட மக்கள் நிறைய வாழும் பகுதியாகும். அவர்களில் பலர் வெளியிடங்களிலிருந்து வந்திருக்கும் மாணவர்களுக்குத் தம் வீடுகளில் விடுதி வசதி அளித்துப் பாதுகாத்து வருபவர்கள். அத்தகைய மக்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே நல்லுறவு கெடாது பாதுகாத்து நடப்பது எல்லோரதும் கடமையாகும். மாணவர்களில் மிகப் பெரும்பாலோர் இதை உணர்ந்து பண்போடு நடந்து வருகின்றனர் என்பதை அப்பகுதி மக்களே ஒப்புக்கொள்கின்றனர். ஒருசிலர் தவறிழைத்தாலும் அதை மாணவ சமுதாயம் முழுப்பேருக்கும் எதிராகக் கொள்ளாது பொறுத்து நடந்து கொள்வது மக்கள் கடமையாகும். எம்மைச் சந்தித்து ஆத்திரத்தோடு பேசிய மக்களிடம் தலைவர் சிவாவும் நானும் கூறியது ஒன்றுதான். "இம்மாணவர்கள் எங்கள் பிள்ளைகள்தானே. பிள்ளைகளை எப்படிக் குறை, நிறை எல்லாவற்றையும் ஏற்று நடத்துவோமோ அப்படியே நடத்த வேண்டுமே தவிர அந்நியராகக் கருதி ஆத்திரத்தில் அறிவிழந்து நடக்கக் கூடாது'' என்றே கூறினேம். தமிழ் மக்களுக்கென்று உள்ள ஒரே பல்கலைக்கழகம் இதுவே. பேராதனை, கொழும்பு போன்ற இடங்களில் வேற்றினத்தவர் மத்தியில் அஞ்சி, அஞ்சி வாழ்ந்து எமது மாணவர்கள் பூரண வளர்ச்சி பெருது தாழ்வு மனப்பான்மையோடு வாழும் நிலையைத் தவிர்த்து, எமது நாட்டில் எம் மக்கள் மத்தியில், எமது பண்பாட்டுச் சூழலில் அச்சமின்றி வாழ்ந்து பூரணத்துவம் பெற்ற வளர்ச்சியைப் பெறவேண்டுமென்பதே தமிழ் மக்கள் அத்தனைபேரதும் ஆவலாகும். இதை உணர்ந்து எம் மாணவர்களும் அச்சுற்றுடலில் வாழும் மக்களும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக வாழ வேண்டுமென்பதே எமது விருப்பம். ஆனல் நடந்து முடிந்த வேதனை தரும் சம்பவத்தையும் நான் மேலே குறிப்பிட்ட சிலஅரசியல் சக்திகள் எப்படிப் பயன் படுத்த முனைகின்றன என்பதை இலட்சிய இதயங்கள் அவதானிக்க வேண்டும்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கம் ஆகியவற்றின் சார்பில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமும், அதே இயக்கங்கள் தமக்கே உரித்தான முறையில் வெளியிட்டிருக்கும் சிவப்புமைச் சுவரொட்டிகளும் எல்லோருடைய கண்களையும் திறக்க உதவுமென்றே நம்புகிறேன். "யாழ்பல்கலைக்கழக அசம்பாவிதங்களின் பின்னணி என்ன?'' என்ற தலைப்பில் வெளிவந்த அத்துண்டுப்பிரசுரம் இச்சம்பவங்களின் பின்னணியில் உண்மையாக இயங்கும் நாசகார சக்திகள் எவை? அவற்றின் உண்மையான நோக்கம் என்ன? என்பவற்றை அம்பலப்படுத்தி விட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டதற்கும் அவர்களுக்கு எதிரான பிரசாரங்களுக்கும் பின்னல் தமிழர் கூட்டணி நின்று செயற்படுகின்றதா? என்று கேள்வி எழுப்பும் இக்கும்பல் எவ்வளவு அபாண்டமான பொய்யைக் கூசாமல் கூறுபவர்கள் என்பதை மாணவர் சமுதாயம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடை தீக்கிரையானதைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த மக்கள் பல்லாயிரமாகத் திரண்டு மாணவர்களைத் தாக்க முற்பட்ட போது செய்தி கேட்டு ஓடோடி அங்குசென்று மக்களைச் சாந்தப் படுத்தி அசம்பாவிதம் ஏற்படாது தடுத்தவர் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் என்பதை இந்த அரிச்சந்திரர்கள் அறியமாட்டார்களா? மாணவர்கள் உள்ளே அடைபட்டு உணவுமின்றி வாடியபோது தனது ஜீப் வண்டியை அனுப்பி உணவு பெற்றுக் கொடுத்தவர் யோகேஸ்வரன் என்பது இவர்களுக்குத் தெரியாதா? இரவுமூன்று மணி வரைக்கும் கண்விழித்துக் காத்திருந்து மாணவர் இம்சைக்கு ஆளாக்கப்படாமல் பாதுகாத்தவர் யோகேஸ்வரன் என்பதும் இவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது. அடுத்தநாள் செய்திஅறிந்து கொழும்பிலிருந்து விரைந்த தலைவர் சிவாவும் தமபி யோகேஸ்வரனும் மக்களுக்கும் மாணவருக்கும் இடையில் எவ்வளவு பாடுபட்டுச் சமரசத்தை ஏற்படுத்தினுர்கள் என்பதை உண்மை உணர்ந்த மாணவர்கள் நன்குஅறிவார்கள். மக்களைச் சாந்தப்படுத்தி வெளியூர் மாணவர்களைப் பாதுகாப்பாய் பேருந்து வண்டிகளில் ஏற்றி அனுப்புவதில் அவர்கள் ஈடுபட்டிருந்த போது - அவர்கள் பல்கலைக்கழக வாசலில் நிற்க வெகுதூரத்தில் எங்கோ சந்தியில் - ஒருமாணவன் கத்தியால் குத்தப்பட்ட மன்னிக்க முடியாத குற்றம் இழைக்கப்பட்டது. இதைக் கேள்விப் பட்டுத் துடித்து அவ்விடத்திற்கு விரைந்தனர் அவர்கள். எங்கள் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கு மிடையே மோதலை ஏற்படுத்திக் கலங்கிய குளத்தில் மீன்பிடிக்க முனையும் சக்திகள் மக்களின் ஒன்றுபட்ட சக்தியைக் கொண்டே இனவிடுதலையைக்காண உழைக்கும் தலைவர்களின் உள்ளத்தை உணரமாட்டார்கள். ஆனல் எமது

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம யாத்திரையைச் சிலர் தேர்தல் யாத்திரை என்று கிண்டல் செய்கிறார்கள்-

ஒரு சதத்துள் காற் சதம் இருப்பது போல, உங்கள் யாத்திரைக்குள் தேர்தலும் அடக்கம் என்ற தத்துவம், வேறு!

இருபத்தி நான்கு மணித்தியாலமும் இனத்தின் வாழ்வுக்காக உழைக்கும் தலைவர்களுக்கு- துரோகிகள் என்ற பட்டத்தையும் தூக்கித் தருகின்றார்கள்-

இவை போதாதென்று- இன்னும் எத்தனையோ விதமான விபச்சார வார்த்தைகளால் வீதிக்கு வீதி நின்று அவர்களை அர்ச்சனை செய்து ஆனந்தக் கடலில் மூழ்கிறார்கள்.

**யார் இவர்கள்?**

தீவிரவாதிகளாம்- தீரன் பகவத் சிங்கின் வழித்தோன்றல்களாம்- திலகரின் பேரப்பிள்ளைகளாம்!

# ஈயின் தலையாக இருப்பதைவிட...

விடுதலை வீரர்களாம்- சுபாஸ் சந்திர போஸின் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருந்தவர்களாம்.

ஒடுக்கப்பட்டோர்க்காக குரல் கொடுப்போர்களாம்- உலகப்புகழ் கார்ல்மாக்ஸின் சிந்தனைகளையெல்லாம் இவர்களின் உதடுகள்தான் வெளியிடுமாம்.

மனித உரிமைகளை மதிப்போர்களாம்- மார்ட்டீன் லூதர்கிங் மரணமான போது- அவருக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தியோர் இவர்கள் தானும்.

செஞ்சீனாவின் சிருட்டி கர்த்தா மாசேதுங்கின் நேரடி வாரிசுகள் இந்த மாமனிதர்கள் தானும்.

முஜிபுர் ரகுமானின் வாழ்க்கைக்கு முடிவு ஏற்பட்ட போது- இவர்களின் முகமே 'அழுததாம்!

இந்த இலட்சணங்களை முகத்தில் எழுதி ஒட்டிக் கொண்டிருப்போரோடு- 'மரியாதை'க்குரிய ஒருமனிதரும் சேர்ந்து கொண்டு நமக்கு 'மங்களம்' பாடுகிறார்.

மாணவர் அமைத்துத் தந்த மேடையில்- அவர்களின் மனக்குமுறலை வெளியிடாமல் இந்தப்'பெரியவர்' தனது 'ஆசாபாசங்'களுக்கு இடம் கொடுத்ததைத்தான் நம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

அரசியலில் எதிரிகளுக்கு அர்ச்சனை செய்வது சராசரி மனிதர்களுக்குச் சரி- ஆனல், சன்மார்க்கத்தில் உயர்ந்தவர்களுக்குமா?

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தமிழ் உள்ளமே மரியாதைக்குரிய அந்த மனிதரின் 'தவறுகளை இந்தத் தபசுகாலத்தில் மன்னிக்கட்டும்-நமக்கு அப்படியொரு தகுதியில்லை!

அது சரி- **இந்த அடலேறுகள் இதுவரை சாதித்ததுதான் என்ன?**

பத்திரிகையில் பரபரப்பான அறிக்கைகள் விட்டிருக்கிறார்கள்-

'விடுதலை வீரர்கள் நாங்களே' என்று விலா நோகக் கத்தியிருக்கிறார்கள்.

'குசுகுசு' கூட்டங்கள் நடத்தி விடுதலை இயக்கத்திற்கு வெடி வைத்துத் தகர்ப்பது எப்படி என்று விவாதமே நடத்தியிருக்கிறார்கள்.

தலைமையைத் தட்டிப்பறிக்க முடியாவிடினும்- அதற்குத் தலையிடியாவது கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

தமிழினத் தலைவர்கள் எழுதுவதையும்- பேசுவதையும் தலைகீழாக மாற்றி செய்தியாக்கி தங்களது சுதந்திரத் தனத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இப்போதைய தலைமை சரியில்லையென்று- வைகுந்தம் வரை போய் ஒரு மனிதரை வலிந்து இழுத்து வந்து, அவரைப் பல்லக்கில் தூக்கி வைத்து பவனி வருகிறார்கள்- பல்லாண்டு பாடுகிறார்கள்!

இப்படி- அரிய பெரிய சாதனைகளை- இந்த அசகாய சூரர்கள் இவ்வளவு விரைவாகவே செய்து முடித்திருக்கிறார்கள்!

இதற்கு இந்தத் தமிழ்ச் சமுதாயம் என்ன செய்ய வேண்டும்?

நடிகை சிறீதேவியை வரவழைத்து, நல்லதொரு பாராட்டு விழாவை நடத்த வேண்டும்!

பாராட்டு மட்டும் போதாது- தங்கப்பதக்கங்களும் பரிசாகத் தரவேண்டும்.

இந்தப் பாராட்டு விழாவில் நம்மைப் போன்றவர்கள் பங்கு பெற மாட்டோம் என்பதினல், அவர்களுக்கு நம் மீது அளவு கடந்த வருத்தம்.

அதனல் நம்மை- 'அமிர்தலிங்கத்தின் வால்கள்' என்று அழைக்கின்றார்கள்.

**ஒரு ஒழுக்கமான விடுதலை இயக்கத்தில் 'கிப்பி' வாழ்க்கைமுறையைப் புகுத்த முயன்று- கட்டுப்பாடு என்ற சாட்டையால் அடிக்கப்பட்டு விரட்டப்பட்ட 'நிர்வாண' மனிதர்களுக்கு-**

நாம் அளிக்கவிருக்கும் பாராட்டுவிழாவைவிட- அவர்கள் நமக்குத் தரும் 'பட்டம்' எவ்வளவோ மேல்! ஏன் தெரியுமா?

ஏதோ ஒன்றைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கும் ஈயின் தலையாக இருப்பதை விட-

அடர்ந்த காடு முழுவதையும் தன் ஆளுகைக்குக் கீழ் வைத்திருக்கும் சிங்கத்தின் வாலாக இருப்பது எவ்வளவோ சிறந்தது-

ஆம்! நாங்கள் வால்கள்தான்!

## ஆசிரியர் பேசுகிறார்

## 1000 மாணவர்களுக்கு 16 ஆசிரியர்கள்

மஸ்கெலியாவில் உள்ள புனித சூசையப்பர் தமிழ் மகாவித்தியாலத்திற்குச் செல்லும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஆக பதினறு ஆசிரியர்களே கல்வி புகட்டுகின்றனர்.

பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்கான தளபாடங்கள் இல்லாததாலும் கட்டடத்துக்கு வெளியே வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. எனினும் மூன்று மாதங்களாகியும் மாணவர்கள் தங்கள் பாடத்திட்டத்தை முடிக்க முடியாமல் இருக்கின்றனர்.

90 ஆயிரம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்டு பெற்றார்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்ட மேற்படி வித்தியாலயத்துக்கான புதிய கட்டடம் இரண்டாம் முறையாக ஓர் அரசியல் வாதியால் திறந்து வைக்கப்பட்டது.

இது ஒரு அரசாங்க மகாவித்தியாலயமாயிருந்தாலும், புதிதாக இதில் சேர விண்ணப்பிக்கும் மாணவர்கள் நூறு ரூபா நன்கொடையாகவும் ஆண்டுக்கட்டணம் 12- ரூபாவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு 4 ரூபாவும் கட்டவேண்டிய நிலையில் உள்ளனர்.

* * *

## குஜராத்தில் குமுறலேன்?

இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றான குஜராத்தில் மாணவர்கள் மத்தியிலே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது இதற்கு காரணம் என்ன?

பின்தங்கிய மக்களுக்கு இடம் 'ஒதுக்கீடு' என்னும் பேரில் எல்லாவிதமான சலுகைகளையும் அரசு அளித்துக்கொண்டிருப்பதினல் திறமை மிக்கவர்கள் வாய்ப்புக்கள் அனைத்தையும் இழந்து அல்லற்படுகின்றார்கள்.

இதனல்தான் அங்கு பெரும் வன்முறைச் சம்பவங்களும் ஏற்பட்டுவருகின்றன.

# துட்டகைமுனுவின் துவேஷப்படை தொடர்ந்து வருகிறது!

## படைத்தளபதிபெரேராவுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்!

ஐ. தே. கட்சியின் தலைமை அமைப்பாளராக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருக்கிறது. தகுதி உடைய ஒருவரே நியமிக்கப்பட்டுளார்.

12-5-79 இல் நீங்கள் பாராளுமன்றத்திலே விளக்கமாகக் கூறினீர்களே. ''வடக்கிலே எல்லாவற்றையும் குவிக்கிறேன் என்று எனக்கு எதிராக தெற்கிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிலர் குற்றஞ்சாட்டாமல் இருப்பது குறித்து ஆச்சரியப்படுகிறேன்.''

வகுப்புத் துவேஷ நஞ்சைக் கக்கும் இத்தகைய பேச்சைக் கக்கிய நீங்களன்றோ வடபகுதிக்கு ஐ. தே. க. அமைப்பாளராக நியமிக்கப்படத் தக்கவர்!

''வடபகுதிக்கு எல்லாவற்றையும் குவிக்கிறேன்'' என்று கூறினீர்களே! நீங்கள் வடபகுதிக்குக்குவித்துள்ளவற்றையும் தெற்குப் பகுதிக்கும் மேற்கு பகுதிக்கும் கொட்டியுள்ளவற்றையும் பற்றிய விபரங்களை வெளியிடுவீர்களக?

சீநோர் அபிவிருத்திஸ்தாபனத்தைவடக்கில்மூடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது: தெற்குக்கும் மேற்குக்கும் அது பணிகளை தொடங்கப்போகின்றது என்று 15-2-79 இல் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் உங்களுக்குச் சுட்டிக்காட்டினர். அப்பொழுது நீங்கள் என்ன கூறினீர்கள்? ''நிச்சயமாக இல்லை'' என்று அடித்துக் கூறினீர்களே! இப்பொழுது சீநோர்ஸ்தாபனம் என்ன நிலையில் வடக்கில் இயங்குகின்றது. வேலையிலிருந்து நூற்றுக்கணக்கானவர்களை நீக்குவதற்குச் சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றனவே! இதற்கு உங்கள் மறுமொழியைக் கூறுங்கள்! (உங்கள் கடற்றெழில் அமைச்சின் 1978-79 ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையின்படி வடபகுதியிலேயே கூடின தொகையான மீனவர்கள் எனக் கூறுகின்றது) தென்மேற்குக் கரையோர அபிவிருத்தித் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி அளிக்கிறது. வடமேற்கு கடற்றெழில் திட்டத்துக்கு அரபு பொருளாதார அபிவிருத்திக்கான அமுதாபி நிதிப்பிரிவு கடன் வழங்குகிறது. கிழக்குக்கரையோரக் கடற்றெழில் அபிவிருத்திக்கு நெதர்லாந்து அரசாங்கம் உதவி வழங்குகிறது. இவற்றைப் போல உங்கள் அறிக்கையின்படி 34.64வீதம் மீனவர்கள் வாழுகின்ற வடபகுதிக் கரையோர மக்களுக்கு ஒரு அபிவிருத்தித்திட்டமும் வகுக்கப்படவும் இல்லை, பிற நாட்டு கடனுதவியும் பெறப்படவில்லையே என்று 15-3-79 இல் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் உங்களுக்குச் சுட்டிக்காட்டியபொழுது நீங்கள் என்ன கூறிச் சமாளித்தீர்கள் என்பதை மறந்திருக்கமாட்டீர்கள்.

வடபகுதி மீனவர்களின் அபிவிருத்திக்கு சீநோர் அபிவிருத்திஸ்தாபனம் பொறுப்பாயிருக்கிறது. அது அங்கே அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டிருப்பதால் வடபகுதி மீனவர்களுக்கு ஏனைய பகுதி மீனவர்களுக்குப் போல கடனுதவியால்செயற்படுத்தப்படும் திட்டங்கள் வகுக்கப்படவில்லை என்று கூறினீர்களே!

உங்கள் பாராளுமன்ற வாக்குறுதியினைச் சுட்டிக்காட்டி

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக மாணவனின் பார்வையில்...

# மதுரையில் ஒலித்த மாணிக்கத் தமிழ்!

மா மதுரைத் திருநகரில் தேமதுரத் தமிழ் கேட்போம் திரண்டு வாரீர், 'உலகப் பேரறிஞர்களே மதுரைக்கு உங்கள் வரவு நல்வரவாகட்டும்,' தமிழன்னைக்கு எழிலூட்ட வந்த பாரத அன்னையே, இந்திரா அம்மையே தமிழகம் தங்களை வரவேற்கிறது' இவ்வாறெல்லாம் வண்ணச் சுவரொட்டிகள் வீதிகளை எங்கும் அலங்கரிக்க ஆங்காங்கே தோரண வாயில்கள் அழகூட்ட வீதிகளின் சந்திப்பிலெல்லாம் தமிழ் வித்தகர்கள் செந்தமிழின் புத்திரர்கள், சான்றோர்களின் உருவச்சிலைகள் தமிழின் சிறப்பையும், தமிழின் வரலாற்றையும் கட்டியம் கூறுவது போல கம்பீரமாக 'தலை நிமிர்ந்திருக்க', என்மனத்தே தலை சரித்த யாழ் நகரின் உருவச் சிலைகள் தோன்றி மறைகின்றன.

தமிழ் பிறந்த, தமிழ் வளர்ந்த லெமூறியா கண்டத்தின் அடிச்சுவடாம் குமரிக் கண்டம் "தமிழகத்தின்" இனிய நன்னுள் அந்த நாள்! பேரறிஞர் அண்ணு கண்ட, பெரியார் கண்ட இனிய கனவுகள் உச்சத்தையடைந்த நனவுக் காட்சிகளவை. ஆம், நான் மாடக் கூடலாம் மாமதுரைத் திருநகரில் தேமதுரத் தமிழோசை பொங்கிப் பாய்ந்து கோடிக்கணக்கான மக்கள் உள்ளங்களிலெல்லாம் பிரவாகித்துச்சென்ற நன்னுள் ஐந்தாவது அனைத்துலக மாநாட்டு நன்னுள். தமிழ் ஆட்சியிலுள்ள, தமிழர்கள் செங்கோலேந்தும் தாய்த் தமிழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இனிய நாட்களவை.

புன்னகை உதிர்த்து முறுவலுடன் வரவேற்பு நல்கும் மக்கள்; கணீரென மணியோசை எழுப்பும் கம்பீரமாக நிமிர்ந்த கோபுரங்களைக் கொண்ட மதுரை மீனுட்சியம்மன் புனித ஆலயம்; நகரின் நடுவே தமிழ் வெள்ளம் பொங்கிப் பிரவாகித்த காரணத்தாலோ என்னவோ அதனைக் கண்டு வெட்கித் தலை குனிந்து அடங்கியொடுங்கி எதுவித ஆர்ப்பாட்டமுமின்றி மெதுவான முனகல் ஓசையுடன் செல்லும் வைகை நதி; "நீ எப்படிப் பாய்ந்தாலும் தமிழோசை கேட்கச் செல்லும் மக்கட்கு நான் வழி அமைப்பேன் எனக் கூறுவது போல் அந்நதியை மேவிய நீண்ட நெடு வைகையாற்றுப் பாலம்; ஆங்காங்கே புதுமையைப் பிரதிபலிக்கும் நவீன கட்டடங்கள்; நகரிலிருந்து சுமார் 10 மைல் அப்பால் பெருவெளி நடுவே மலையடிவாரத்தில் அமைந்த அறிவுக் களஞ்சியமாம் காமராஜர் பல்கலைக்கழகம், நகரின் மத்தியில் பல இலட்சம் மக்களை உள்ளடக்கக்கூடிய குதிரைப் பந்தயத் திடல், தொடர் வரிசையாக தமிழகத்தின் கைத்தொழில் திறனை எடுத்தியம்பும் பட்டு, கைத்தறி நெசவு ஆடைகளுடன் ஏனைய சிற்பம், கலை ஓவியங்களும் கொண்ட வாணிக நிறுவனங்கள்; அகன்ற, எங்கும் வண்ணச் சோடனைகள் கொண்ட அலங்கார விளக்குகள் அழகூட்டும் நீண்ட நெடுஞ்சாலைகள்; இவை தாம் மதுரை மாநகரத்தின் சிறப்பு மிக்க முக்கியமான காட்சிகள். இரவு வேளையில் பந்தயத் திடல் மத்தியிலே இலட்சக் கணக்கான வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சுமார் 300 அடி உயரமான இரு மின்விளக்குக் கோபுரங்கள் மாநாட்டு மைய ஸ்தானத்திற்கு கலங்கரை விளக்கம் போல் நிமிர்ந்து நின்று வழி காட்டிக் கொண்டிருந்தன. பந்தயத் திடலின் மத்தியில் அமைந்த பிரதான அரங்கம் தமிழகத்தின் வண்ண வேலைப்பாடுகட்கு விளம்பரம் கூறுவதுபோல் அமைந்திருந்தன. அதன் முன்னே இலட்சக் கணக்கான மக்கள் வசதியுடன் இருந்து பார்க்கத்தக்கதாக 5 பவலியன்கள்; சற்று அப்பால் மூவேந்தர் அரங்கம் பெரும் அலங்காரப் பந்தலினுள் அமைந்திருந்தது. அரங்கத்தின் அந்தத்தில் 5ம் உலகத் தமிழ் மாநாடு மதுரை எனும் வாசகமும் அதன் கீழ் தமிழாராய்ச்சி மாநாட்டு நிறுவனத்தின், புலி, ஏடு, உலகம், மீன், வில், கோபுரம் என்பனவற்றைக் கொண்ட சின்னம் பொறிக்கப்பட்ட திரையும் அமைந்து மூவேந்தர் அரங்கிற்கு சிறப்பையும் பொலிவையும் ஊட்டிக் கொண்டிருந்தது.

1981 ஜனவரி 4ந்திகதி உலகத் தமிழ்மாநாடு மதுரையில் கோலாகலமாக ஆரம்பமாகியது. முதலில் கோலாலம்பூரிலும் அடுத்து சென்னையிலும் பாரீஸ், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் முன்னையமாநாடுகள் நடைபெற்றன. மீண்டும் தமிழகத்தில் தமிழக ஆட்சியாளரின் விருப்பத்தின் காரணத்தால் செனகல் நாட்டில் நடைபெறவிருந்த மாநாடு மதுரையில் நடைபெற ஏற்பாடாயிற்று உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் ஆரம்பக் கர்த்தா யாழ்ப்பாணத்து நெடுந்தீவைச் சேர்ந்த வண. பிதா. சேவியர்ஸ்ரனிஸ்லோஸ் தனிநாயகம் அடிகளாவார். இவர் தமது படிப்பினை இந்தியாவிலும், ரோமாபுரியிலும் மேற்கொண்டு பின்பு மலேசியப் பல்கலைக்கழகத்தின் இந்தியத்துறைப் பீடத்தலைவராயும் பேராசிரியராயும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராகவும் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்த் தூது தனிநாயகம் என்று சிறப்பாகக் கூறப்படும் இவர் உலகமெங்கும் தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்துச் சென்று பரப்பியவர். ஆங்காங்கு உலக நாடுகளிலெல்லாம் உள்ள நூலகங்களுக்குச் சென்று அரிய தமிழ் நூல்களை ஏட்டுப் பிரதிகளை தேடியெடுத்து நுண்படப் பிரதியாக்கி தமிழாய்வு நிகழ்த்தியவர். தமிழ்ப்பண்பாடு எனும் ஆங்கிலச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக விளங்கிய இவர் தமிழ்மொழி, தமிழினம், தமிழ் மண், பண்பாடு கலைகலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க என்றும் குரலெழுப்பி தமிழ் மக்களை, அவர்தம் தமிழுணர்வைத் தட்டியெழுப்பியவர். இத்தகைய தமிழ்ப்பேரறிஞரைக் கௌரவித்து இம்மாநாட்டில் சிலை அமைத்தமை மாநாட்டிற்கு மேலும் மெருகூட்டுவது போல் அமைந்தது. மேலும் ஆறுமுகநாவலர் உட்பட பன்னிரு தமிழ் அறிஞர்கட்குச் சிலைவைத்துக் கௌரவித்தமை சிறப்பானதொன்றே.

மதுரை உலகத் தமிழ்மாநாட்டின் நிகழ்ச்சிகள்எவ்வாறு ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன என்பது பற்றி சற்று விளக்குவது பொருத்தமானது. மாநாட்டின் பிரதான அம்சமான 'தமிழ்ஆராய்ச்சிக் கருத்தரங்கு' மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் மண்டபத்திலும் ஏனையசிறு குழுக்களாக பல அறைகளிலும் நடைபெற்றன. இங்கு உலகநாடுகளான பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், யப்பான், சீனு, சிங்கப்பூர், இலங்கை, மொரிசீயஸ், அந்தமான், ரஷ்யா, மாலைதீவு போன்ற 200 க்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து சுமார் 650 பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தார்கள். 3500 பேர் பார்வையாளராகக் கலந்து கொண்டனர். சுமார் 300 ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வுக் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இலங்கையிலிருந்து 150 தமிழறிஞர்கள் கலந்து கொண்டார்கள். 72 கட்டுரைகள் இலங்கையின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டன.

பிரதானஅம்சமான ஆய்வுக் கருத்தரங்கு உலகத்தமிழறிஞர்களால் நடத்தப்பட்டது. அரசு நிகழ்ச்சிகளான ஆரம்ப நாள் விழா, தோரண வாயில்கள் திறப்பு விழா; சிலைதிறப்பு விழா; மாநாட்டு மலர் வெளியீடு; திருமலை மகால்ஒலி, ஒளி காட்சிவிழா; மாநாட்டு இறுதி நாள்ஊர்வலம்; நிறைவுவிழா; உலகத் தமிழ் கலைகளின் மகிமைபற்றி விளக்கும் உலகத் தமிழ் மாநாட்டு கண்காட்சி தமிழகம்என்னும் குமரிக்கண்டம் எவ்வாறு லெமூரியாவிலிருந்து தோன்றியது என்பதைக்கூறும் 'குமரிக்கண்டம்' திரைப்படம்; ஆகியன தமிழ்நாட்டு அரசால் நடத்தப்பட்டது. பொது நிலைக் கருத்தரங்கு எனும் தலைப்பில் பொது மக்களுக்கு சுவையான விருந்தாகவும் பிரயோசனமானதாகவும் கருத்தரங்கங்கள், கவியரங்குகள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் என்பன பந்தயத் திடலிலுள்ள மூவேந்தர் அரங்கில் நடத்தப்பட்டன. இவை கவிஞர்கள், எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோரினுல் நடத்தப்பட்டன. மாநாட்டு கலை நிகழ்ச்சிகளான இசை, நாட்டியம், நாடகம் என்பன கலைஞர்களினுலும், நடன மேதைகளினுலும், நடன வல்லுனர்களாலும் மதுரைக் கல்லூரி புனித, மேரிக் கல்லூரி, தமிழ் இசைச் சங்கம் பந்தயத் திடல் அரங்கம் இலட்சுமி சுந்தரம் அரங்கம் ஆகிய இடங்களில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மாலை 6மணி தொடக்கம் நள்ளிரவு வரை வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. சில பிரபல கலை நிகழ்ச்சிகள் மாறி மாறி ஒவ்வொரு அரங்கிலும் நடத்தப்பட்டன.

பிரபல வர்த்தகர்கள் தமிழ் நாட்டு முதல்வர், உற்பத்தி நிறுவனங்கள் ஆகியோர் உலக நாட்டுபேராளர்களுக்கு மதிய, இரவு உணவுகளை அளித்து மாநாட்டு நாட்களின் போது விருந்தினர்களை கௌரவித்தார்கள். பேராளர்கள் பத்திரிகையாளர்கள் அனைவர்க்கும் தங்குமிட வசதிகள் உணவு வசதி விசேட ஆடம்பர பஸ் போக்குவரத்து வசதி, மாநாட்டு நினைவாக மலர், ஏனைய வசதிகள் அனைத்தும் தமிழ்நாட்டு அரசால் அளிக்கப்பட்டது. மதுரை காமராஜர் பல்கலைக்கழக விடுதியும் ஏனைய பலஒட்டல்களும் இவர்களின் தங்குமிட வசதிக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருநாட்டின் உலகத் தமிழ் மன்ற கிளைகட்கும் பொறுப்பானேர் அந்தந்த நாட்டின் பேராளர்கட்கு பொறுப்பாக விளங்கினர்.

பத்திரிகையாளர்கட்கு தேவையான சகல வசதிகளையும் தமிழ் நாடு அரசாங்கம் வெகு சிறப்பாகச் செய்திருந்தது. இவர்கட்கு சகலநிகழ்ச்சிகளையும் வசதியாகப் பார்வையிட எல்லா அரங்கங்கட்கும் மிக அண்மையில் இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. பத்திரிகையாளர்கள் அங்கு நன்கு மதிக்கப்பட்டனர். தகவல் தொடர்பு உட்பட பல வசதிகள் அளிக்கப்பட்டிருந்தன.

தமிழ்நாடுஅரசாங்கம்சுமார் 10 கோடி ரூபாவை இம்மாட்டுக்காக ஒதுக்கியிருந்தது. எனினும் சில நிர்வாகக் குறைபாடுகள் பல வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடையே அதிருப்தியை காட்டியமை தவிர்க்க முடியாத ஒன்ருக இருந்தது. எனினும் பிரதிநிதிகள் அனைவரும் நன்கு பாடுபட்டதை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

இந்த மாநாடு பற்றி கடந்த நான்கு மாநாடுகளிலும் பங்கு பற்றிய யப்பானிய அறிஞர் ஒருவர் தெரிவித்த கருத்து சிந்திக்க வேண்டியதே "இந்த மாநாடு தமிழ் ஆராய்ச்சிக்காக நடத்தப்பட்ட ஒன்ருகத் தெரியவில்லை. இது ஒரு அரசியல் விழாவாக தோற்றுகிறது



இந்த நிலையை மாற்றி அடிப்படை நோக்கான தமிழாராய்ச்சிக்கு முதலிடம் அளிக்கத்தக்க வகையில் மாநாடுகள் எதிர்காலத்தில் நடத்தப்பட வேண்டும். சிரேஷ்ட அங்கத்தவர்கள் என்ற முறையில் தேவையேற்படின் மன்றத்தின் நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டும்" என்று இவர் கூறியதனை தமிழ் ஆய்வில் உண்மையிலேயே ஆர்வமுள்ள எவரும் சீர்தூக்கி நோக்கவே விரும்புவர். சென்னையில் பேரறிஞர் அண்ணு தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் தமிழ் ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்ததையும் அவ்வறிஞர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கருத்தில் ஒரளவு உண்மைகள் இருப்பினும் தமிழ் நாடு அரசு நடாத்திய கண்காட்சி, குமரிக்கண்டம் திரைப்படம், சிலை வைத்து அறிஞரைக் கௌரவித்தவை, நூல் வெளியீடு என்பவை சாதாரண பொது மக்களுக்கும் பல நல்ல சிந்தனைகளை உருவாக்க உதவிபுரிந்துள்ளன என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

(வளரும்)

---

✲ மதுரையில் நடைபெற்று முடிந்த 5-வது உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதப்பட்ட கட்டுரைத் தொடர் இது. தனிப்பட்ட அனுபவங்கள் குறைக்கப்பட்டு என்ன அங்கு நடைபெற்றுள்ளன? என்பதை ஓரளவு சுருக்கமாகவும், தெளிவாகவும் வாசகர்கட்கு உணர்த்தி எதிர்காலத் தமிழ் மாநாடு எப்படி அமையவேண்டும்? என்பதை உணர்த்துவிப்பதே என் நோக்கம். அது ஒரு வரலாற்றுக் குறிப்பேடாகவும் திகழலாம் என்பதும் என் எண்ணம்.

— இணுவை ந. சண்முகப்பிரபு
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாப் புகழ்படைத்த அமரர் மாணிக்கராசா!

● ஈழத்து நாதன் ●

தமிழினத்தின் வாழ்வுக்கும்--வளத்துக்கும்-- தமிழ் ஈழத்தின் உயர்வுக்கும்--உறுதிக்கும் இறுதிவரை உழைத்துவிட்டு 1981-02-13ல் நீங்காத் துயில்கொண்ட, சு. ம. மாணிக்கராசா அவர்கள் அமரராகிவிட்டார். அனைவரையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

அயோக்கியர் புகலிடம் அரசியல் என்ற அடைமொழியை முறியடித்து-- அரசியலைப் புனிதமாக்கிய தந்தை செல்வாவின் பாசறையில் தன்னையே இணைத்துக்கொண்டு தூய்மை — நேர்மை—பயமின்மை ஆகிய நற்பண்பின் நிலைக்களனாய் வாழ்ந்தவர் அமரர் மாணிக்கராசா அவர்கள்.

1963ல்அமரர் இராஜவரோதயம் அவர்கள் மறைவின் பின்பாராளுமன்றப் பதவி அவரைத் தேடி வந்தது. அவ்வேளை அவர் அப்பதவியால் குதூகலிக்கவில்லை, தன்னை மறக்கவில்லை. பதிலுக்குத் தன்னைத் தாழ்த்திக்கொண்டார் — தனது சுமையை உணர்ந்துகொண்டார்.

அதேபோல் 1970ல் கட்சியின் வேட்பாளராக அமரர் நேமிநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டார். அதனுல் அமரர் மாணிக்கராசா அவர்கள் உள்ளம் உடையவில்லை -- கட்சியின் கட்டளையை ஏற்ருர், கட்சியின் வெற்றிக்காக உழைத்தார், இறுதித் தேர்தல் 1977 வரை உழைத்தார். இதனுல், தான் கண்ணியவான் என்பதை, கொள்கைவாதி என்பதை நிலைநாட்டினுர்.

1963 ல் பெரிய குளம் பகுதியில் அரசினரால் காணிக் கச்சேரி நடாத்தப்பட்டது. அதில் தமிழர்கள் சிறுதொகையாகவும் சிங்களவர்கள் பெரும்

## கோணமாமலை தந்த கொள்கைத் தங்கம்!

பான்மையாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். அவ்வேளை ''தமிழர் நிலத்தில் சிங்களக் குடியேற்றமா? தடுத்து நிறுத்துங்கள் காணிக் கச்சேரியை, இல்லையேல் இனக் கலவரம் இந்நாட்டில் வெடிக்கும்'' எனப் பச்சையாகத் தந்தியனுப்பிக் காணிக் கச்சேரியை நான்கு தடவைகள் இரத்துச் செய்த கர்ம வீரன் அவர். அத்தோடு மேற்படி காணிக் கச்சேரியை தொடர்ந்து நடாத்தச் செய்து அந்நிலப் பரப்பில் பெரும் பகுதியைத் தமிழ் இனத்துக்குப் பகிர்ந்தளிப்பதில் வெற்றி கண்ட விறல் வேந்தன் அவர்.

1962ம் ஆண்டில் பாலையூற்றுப் பகுதியில் குடியேறிய தமிழர்கள் அக்காணிக்கு உரித்தற்றவர்களாக -- உத்தரவுப் பத்திரம் இல்லாதவர்களாக -- எந்த நேரத்திலும் தம் காணிகளிலிருந்து வெளியேற்றப்படக்கூடிய பேராபத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்த வேளை, 1966ல் காணி அமைச்சரோடு பேசிவாதாடி, காணி அமைச்சின் நிரந்தரச் செயலாளரையே அண்ணன் அமிர்தலிங்கத்தோடு திருக்கோணமலைக்கு அழைத்து வந்து, சம்பந்தப்பட்ட காணிகளையும் நேரில் காண்பித்து அத்தனைபேருக்கும் காணிஅனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுத்து அக்காணிகளைத் தமிழர்களுக்குச் சொந்தமாக்கிய பெருந்தகை அவர்.

திருகோணமலை நகரத்தின் மத்தியிலே அடர்ந்த காடுகளாய் - யாருமே செல்லமுடியாத பகுதியாய் - மலைப் பிரதேசமாய் இருந்த உவர் மலைப் பகுதியில் 1966ல் தமிழ் மண் காக்கும் தனையர்கள் பலர் உணர்வு பூர்வமாக மேற்கொண்ட நடவடிக்கையால் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் குடியேறிக்கொண்டிருந்த வேளை, சிங்களத் தேசிய வாதத்துக்கு சாமரை வீசுவதிலே சுகம் கண்டவர்கள் குறுகிய புத்தி படைத்தவர்கள் சென்று முறையிட்ட காரணத்தால், இளைஞர்கள்பலர் சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டார்கள், சித்திரவதைக்கு ஆளானுர்கள். அநீதியை அனுமதிக்காத அடங்காத் தமிழன் அமரர் மாணிக்கராசா அவர்கள் தமிழ் இளைஞர்களின் சார்பில் ஆட்சியாளர்களுடன்எதிர்வாதம்செய்து இளைஞர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கச் செய்ததோடல்லாது - அக்காணிகளை அதே இளைஞர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் ஏற்பாடு செய்தார். நன்றி மறவா தமிழர் தம் குடியேற்றப் பகுதிக்கு அமரர் மாணிக்கராசாவின் பெயரால் 'மாணிக்கநகர்' எனப் பெயருமிட்டனர். இதே காலக்கட்டத்தில்தான் ஆசிரியர் வீடமைப்புத் திட்டத்திற்கென பெரும்பகுதியானகாணியையும் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் அதே பகுதியில் ஒதுக்கிக்கொடுத்து காணியற்ற சமூகத்துக்குக் கைகொடுத்து உதவினுர்.

1967ல் யாழ் நகரிலிருந்து வந்த இளைஞர்கள் பலர் இன்றைய இளைஞர் பேரவையின் வழிகாட்டிகளான திரு.மாவை சேனுதிராசா போன்ற சிலர், சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த அக்குடியேற்றங்களுக்கு ஆட்சியாளர்கள் அளிக்கும் ஆதரவை முறியடிக்க, ஒரு பிரச்சனையையே உருவாக்கி - கலகம் பிறந்தால் நீதிபிறக்கும் என்பதற்கு ஏற்ப சிங்கள பகுதியிலே, தமிழர் குடியேற்றத்தை மேற்கொண்டார்கள். ஆத்திரமும் ஆவேசமும் கொண்ட சிங்கள வெறிபிடித்த அதிகாரிகள், அப்பகுதியில் குடியேறியவர்களின் வீடுகளை காடையர்களுடன் வந்து தீ வைத்தும், கொள்ளையிட்டும் அவ்விளைஞர்களுக்கு எதிராக எழுபத்திரண்டு வழக்குகளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய அதிகாரிகள், தீ வைத்தும் கொள்ளையிட்டும் நடந்துகொண்ட மிருகத்தனத்தை முற்ருக வெறுத்து மனச்சாட்சியற்ற இவ்வநீதிக்கு முடிவுகண்டேயாகவேண்டுமென அமரர் மாணிக்கராசா அவர்கள் கிளர்ந்தெழுந்தார். உடனடியாகத் தந்தை செல்வாவோடு தொடர்பு கொண்டார்; அன்றிரவே கொழும்பு சென்று அமைச்சர்களையும் -- உயர்அதிகாரிகளையும் கண்டுபேசி நீதிக்குக் குரல் கொடுத்தார். அதே வெறியோடு திருகோணமலைக்குத் திரும்பிய அமரர், அவ்வதிகாரிகளுக்கு எதிராக சட்டத்தரணிகளாக இருந்த அண்

(7-ம் பக்கம் பார்க்க)


---

# உள்ளொன்று; புறமொன்று--- இதுதான் உத்தமர் ஜே. ஆர்.!

**வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகின்ற அரசியல் முக்கியஸ்தர்களுக்கு, இலங்கை வாழ் சிறுபான்மை இனத்திற்கு விளைவிக்கப்படும் அனர்த்தங்களும் அவர்களது உள்ளக் குமுறல்களும் இருட்டடிக்கப்படுகின்றன.**

இம்மாதம் 5ந்திகதி வெளியான டெயிலிமிற பத்திரிகையின் முன்பக்கத்தில் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானிய இளவரசர் அக்கி கிட்டோவிற்கு கண்டியில் நடைபெற்ற வரவேற்பில் இளவரசர் பேசிய பேச்சுக்கள் வெளியிடப்பட்டிருந்தது. ''இந் நாட்டின் ஜனதிபதி மாண்புமிகு ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் பௌத்த தர்மத்தின் தாரகை மந்திரமான பொறுமையை தளராது கடைப்பிடித்து இந்த நாட்டில் நீதியும், சுபிட்சமும், ஆன ஒரு சமூகத்தை உருவாக்க அயராது பாடுபட்டு வருகின்ருரென்பதை நான் அறியும்பொழுது மகிழ்ச்சியும் பெருமையும், அடைகின்றேன்.'' இவ்வாறு இளவரசர் அக்கிகிட்டோ ஜனதிபதிக்கு புகழாரம் சூட்டியுள்ளார். ''இத்துடன் நிறுத்திவிடவில்லை. ''சான்பிரான்சிஸ்கோ நகரில் அன்று நடைபெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உலக சமாதான மகாநாட்டில் இந்த நாட்டின், உங்களது இன்றைய அறிவாற்றல் மிக்க ஜனதிபதி, புத்தபகவான் போதித்த அருள் மொழியை எடுத்துக் கூறினுர்.

''அன்பினுல் வெறுப்பை அகற்ற முடியுமே தவிர- வெறுப்பை வெறுப்பினுல்



அகற்ற முடியாது. அவரது குறித்த கூற்று எமக்கு உலக சமாதானத்துக்கு அன்று வழி வகுத்தது.'' (இத்துடன் இளவரசர் அக்கிகிட்டோவினுடைய பாராட்டு நின்றுவிடவில்லை.)

''சாந்தி-சமாதானம் ஆகிய இரண்டும் இந் நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மை பௌத்த மக்களின் நரம்பிலோடுகின்ற இரத்தத்தில் இணைந்து ஓடுகின்றது என நான் கூறினுல் அது மிகையாகாது.''

1977-ல் ஆட்சியாளரின் இராணுவ, பொலிஸ்,சிங்களக் காடையர்களின் மூலமாக இந் நாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் சிறுபான்மையினத்தை

## கட்டடத் திறப்புவிழாவில் வவுனியா 'சிவா' பேச்சு!

மனுதர்மத்திற்கு அப்பாற்பட்ட முறையில், நசுக்கி, அடக்கி, ஆள்வதற்கு பெரியார் ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களினுல் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத தீயை 'யுத்தம் என்ருல் யுத்தம், சமாதானம் என்ருல் சமாதானம்' என்ற தார்மீக பௌத்த ஜனதிபதியின் கர்ச்சனையை- பாவம் அண்மையில் இந்நாட்டுக்கு விஜயம் செய்த ஜப்பானிய இளவரசர் அறிந்திருக்கவில்லை.

எப்பாவமும் செய்யாத அப்பாவி தமிழ் பேசும் தாய்க்குலத்தின் கற்பு பறிக்கப்பட்ட சோகக் கதைகளை- தீக்கிரையாக்கப்பட்டு எரிந்த இல்லங்களை- இவர்களின் சடலங்களிலிருந்து பீறிட்டுப் பாய்ந்த செங்குருதி வெள்ளத்தை- பாவம் அப்பாவி ஜப்பானிய இளவரசர் அக்கி கிட்டோ கண்டோ, கேட்டோ இருக்க முடியாது. கண்டிருந்தால் கேள்விப்பட்டிருந்தால் இந்நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மை சிங்கள மக்களின் உடலிலே ஓடுகின்ற இரத்தத்தில் 'பொறுமையும், சமாதானமும்' என்ற புத்தபிரானின் போதனை உயிர்நாடி ததும்பி ஓடுகின்றதென்று ஜப்பானிய இளவரசர் கண்டியிலே நடைபெற்ற வரவேற்பு வைபவத்திலே கூறத்துணிந்து இருக்கமாட்டார்.

இந்நாட்டில் நடைபெறுகின்ற அநீதி, அராஜகம், அநியாயம் அத்தனையும் இருட்டடிக்கப்பட்டு இங்கு வருகின்ற வெளிநாட்டு அரசியல் பிரமுகர்களுக்கு சாந்த சொரூபி புத்தரின் போதனைகளையே மூச்சாக, பேச்சாகவைத்து தார்மீக ஆட்சி நடைபெறுகின்றதெனப் பாசாங்கு காட்டப்படுகின்றது.

சான்பிரான்சிஸ்கோ சமாதான மகாநாட்டிலே பெரியார் ஜே. ஆர். பேசியது வீட்டில் உள்ள ''உனக்கல்லடி இது ஊருக்கு உபதேசம்'' என்ற உண்மையை இளவரசர் அக்கி கிட்டோவிற்கும் ஜப்பானிய பௌத்தர்களுக்கும் எடுத்துக் கூற வேண்டியது எமது கடமை. இதனைத் தவருது நாம் செய்வோம். இவ்வாறு வவுனியா சீ, சீ. பாடசாலையின் புதியகட்டடத் திறப்பு விழாவில் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் பேசினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் வெள்ளத்தில் மிதக்கும் கரடியனறு தமிழ்மக்கள்!

## கரை சேர்க்கும்படி தலைவர் அமிருக்குக் கடிதம்

"ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்" -- என்பார்கள். நான் வரைகின்ற இந்த மடல் மட்டுநகரில் இருந்து சுமார் 18 மைல்கள் தொலைவில் பதுளை வீதியில் அமைந்துள்ள கரடியனறு என்னும் கிராமத்தில் வாழும் சுமார் 50 ஏழைக் குடும்பங்களின் கண்ணீர்க் காவியம். அதிகார மமதையால்--கரடியனறு அரசாங்க விவசாயப் பண்ணையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் தொழிலாளர்களாகவும் சாரதிகளாகவும் மற்றும் சிற்றூழியர்களாகவும் கடமை புரிந்த குடும்பங்கள் கடந்த 1½ ஆண்டுகளாக வடித்துக் கொண்டிருக்கும் கண்ணீரை எனது ஊற்றுப் பேனவினூடாக ஓட விட்டுள்ளேன்-நீதி கேட்டு.

விபரக் கோவை - கடந்த வருடம் கரடியனற்று அரசாங்க விவசாயப் பண்ணையில் கடமைபுரிந்த ஜெகநாதன் என்ற உதவிப் பண்ணை முகாமையளர் கடமை புரிந்த் தொழிலாளர்களை -- குறிப்பாக பெண் தொழிலாளர்களை புழுக்களைவிடவும் குறைவாக மதிப்பிட்டும் -- அழகு தமிழில் ஆயிரம் பண்பான கருத்துள்ள வார்த்தைகள் இருக்க -- எழுத்தில் வடிக்க முடியாத வார்த்தைகளை பிரயோகித்து தொழிலாளர்களிடத்து வேலை வாங்கியதன் விளைவு -படிப்பறிவற்ற தொழிலாளி தனக்குத் தெரிந்த பாணியில் தன்மான உணர்ச்சியினல் உந்தப்பட்டு அந்தமுகாமையாளரை தண்டித்தார்கள். இந்தச் சம்வம் சரியா--பிழையா என்பதை நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கும் வழக்கு புலப்படுத்தும்-- குற்றவாளியானல் சம்பந்தப் பட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

ஆனல் இங்குள்ள அதிகாரிகளும் -- தலைமைப்பீட உத்தியோகத்தர்களும் அவர்களுக்கு வழங்கியுள்ள தண்டனை பரசுராமன் கதையைப் போன்றது. 2,3 பேர் சம்பந்தப்பட்ட இந்த சம்பவத்திற்கு -- இந்தக் கிராமத்தில் உள்ள 50 குடும்பத்தையும் பழிவாங்க முனைந்து செயல்பட்டது மனிதத் தன்மைக்கு அற்பாற்பட்டது. வசதி குறைந்தவர்கள் படிப்பு ஆற்றல் குறைந்தவர்கள் -- தங்களை வழி நடத்த தகுந்த தலைவர்கள் இல்லாதவர்கள்.

அமைய தொழிலாளர்களாக கடமை புரிந்த இக் கிராமத்து மக்கள் எல்லோரையும் இச்சம்பவத்தை வைத்து வேலையில் இருந்து நீக்கியுள்ளார்கள். நிரந்தர ஊழியர்களை (சாரதி தொழிலாளி-காவலாளி) எல்லோரையும் "இலங்கைப் படத்தில் இந்த இடம் எங்கே இருக்கிறது" என்று தடவிப்பார்ப்பதற்கு-- இவர்களுக்கு 1 மாதம் செல்லும்" என்று மமதையுடன் கூறிய அதிகாரிகள் நுவரெலியா மாவட்டம், வட்டப் பொல, அநுராதபுரம் மாவட்டம், போன்ற கஸ்டமான இடங்களுக்கு மாற்றினுர்கள். மிகக் குறைந்த சம்பளம் பெறும் இத் தொழிலாளர்கள் 5-10 பிள்ளைகளை கொண்ட குடும்பங்கள் - செய்வதறியாது திகைததார்கள். தமிழ்மொழியை விடவேறு எந்தப் பாஷையும் தெரியாததால் ஊமையானர்கள்.

கஷ்ட நிமிர்த்தம் வீட்டிற்கு வந்தவர்கள் -- அண்மையில் நடந்த வேலை நிறுத்தம் காரணமாக வேலை இழந்த ஊழியர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு. தற்போது வேலையின்றி உண்ண உணவிற்கும் வழியின்றி கஷ்டப்படுகின்றூர்கள். ஒவ்வொரு குடும்பமும் 5 முதல் 10 எண்ணிக்கையைக் கொண்டது. 90% மானவர்கள் இந்த பண்ணைத் தொழிலையே நம்பி வாழ்ந்தவர்கள். இவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவும் மீண்டும் இவர்களுக்கு வேலை பெற்றுக் கொடுக்கவும் ஆவன செய்வீர்கள் என நம்புகிறேன். இங்குள்ள தேசிய பேரவை உறுப்பினர்களோ, மந்திரிகளோ இவர்களுக்கு உதவ முன்வரவில்லை.

மேற்குறிப்பிட்ட சம்பவத்தை சாட்டாக வைத்து தற்போது ஒரு சிங்களவனும் வேலை செய்யாத இப் பண்ணையில் பண்ணை முகாமையாளர்-உதவிப் பண்ணை முகாமையாளர்- சாரதிகள்- காவலாளிகள்- மேற்பார்வையாளர்கள் என்று சுமார் 22 பேர் வரை கடமையாற்றுகின்றூர்கள். இவர்கள் பேசும் பாசை புரியாது தொழிலாளர்கள் விழிக்கின்றூர்கள். அண்மையில் பொங்கல் விழா என்ற போர்வையில் தொழிலாளர்களிடம் பல ஆயிரம் ரூபா வசூலித்து புத்தபிக்குவை வரவழைத்து பிரித் ஓதப்பட்டது. சிங்கள மயம் ஊடுருவல் இப்படியும் நடக்கின்றது.

இவ்வாறு கரடியனற்றைச் சேர்ந்த திரு. சா. சிவபாக்கியராசா என்பவர் தலைவர் அமிர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அழியாப் புகழ் படைத்த...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ணன் சம்பந்தன், அமரர் கனகசிங்கம் ஆகியோர் மூலம் நீதிமன்றத்தில்வழக்குத்தொடுத்து சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வெற்றி பெற்ருர்.

தமிழ் மண்காக்கும் பணியில் அமரர் கண்ணும் கருத்துமாயிருந்தார் என்பதோடு தனக்குச் சொந்தமான காணிகளையே பொதுமக்களின் தேவைக்காக கொடுத்து உதவினுர் என்பதையும் நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கின்ருேம். திருகோணமலை மக்களின் சேமக்காலையாக இன்றும் பயன்படுத்தப்படும்பரந்த நிலப்பரப்பு, அமரரின் சொந்தக் காணியும் அவரால் நன்கொடையாகஅளிக்கப்பட்டது மாகும். அத்தோடுஉப்புவெளியில் இருக்கும் மாந்தோட்டக் காணியையும் தம் இன மக்களின் குடியிருப்புக்காக வழங்கியவர் அமரர்என்பதை நினைக்கும்போது அன்னுரின் பரந்த உள்ளமும் தூய சிந்தனையும் வள்ளல் தன்மையும் பர்ணமிக்கின்றது.

தொண்டர்கள் தான் இயக்கத்தின் கண்கள். தலைவர்கள் பலரைநாம்இழக்கலாம்.ஆனல் தொண்டன் ஒருவரைக்கூட நாம்இழக்கமுடியாதுஎன அடிக்கடிஅமரர் கூறுவார். பசுமரத்தாணிபோல் அவரது உள்ளத்தில்பதிந்திருந்தஇவ்வுணர்வால் அமரர் அவர்கள் இயக்கத்தை சார்ந்தவர்களின் நலனில் வெகுவான அக்கறைகொண்டவராகவே இருந்தார். அமரர்கள் அவர்கள் தமிழ் மக்களின் உள்ளத்தில் நிறைந்து அவர்களது அபிமானத்துக்குரியவராக விளங்கிய அதேவேளை சிங்களத் தலைவர்களாலும் வெகுவாக மதிக்கப்பட்டார்.

தமிழ் இனத்துக்குத் துன்பங்கள் சூழ்ந்தபோதெல்லாம் உள்ளம் துடித்தவர் அமரர். கலங்காத உள்ளம் படைத்த அமரர் தமிழினம் கண்ணீருக்கு இலக்கான காலங்களில் கண் கலங்கியவர். அதன் காரணத்தால் நோய்வாய்ப்பட்ட போதிலும் நலிந்து போன உடல்நிலையிலும் 1977ஆவணி அமளியின்போது அடிக்கடி பாராளுமன்ற உறுப்பினர் அண்ணன் சம்பந்தர் அவர்களைச் சந்தித்தும் நிலைவரத்தை அறிந்தும் ஆலோசனை கூறியும் தன் இனத்திற்கு தன் பங்கினை ஆற்றினுர்.

மறைந்து விட்டது மாணிக்கம் - ஆனல் தமிழ்இனம் உள்ளவரை அமரரின் சீரியதொண்டு பிரகாசித்துக்கொண்டே இருக்கும். தமிழர் நெஞ்சத்தில் அவரது உருவம் பசுமையாக நிறைந்தே இருக்கும். இன்னும் பல அவர் நினைவைப் பறை சாற்றிக் கொண்டேயிருக்கும்.

## போலி 'இடது'களின்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவ சமுதாயம் தம்மையும் பொதுமக்களையும் மோத வைத்து தமக்கு ஆதாயம்தேட முற்பட்டிருக்கும் இத்துண்டுப் பிரசுரம் வெளியிட்டவை போன்ற இயக்கங்களையிட்டு — அவர்களின் பின்னணியில் மாணவர் மத்தியில் விஷவித்துகளை விதைக்கும் சக்திகளைப்பற்றி விழிப்பாக இருப்பார்கள் என்றே நம்புகிருேம்.

சென்ற அரசாங்கம் தமிழ் மாணவர்களுக்கு தரப்படுத்தலைக் கொண்டுவந்ததை ஆதரித்து நின்ற கும்பல் இன்று பல்கலைக்கழக் அனுமதியில் அநீதி இழைக்கப்பட்டதென்று— ஆடு நனைகிறதேயென்று அழும் ஓநாய்போலக் — கூக்குரலிடுகின்றனர். அதே குரலில் தமிழ் மாணவரின் இடர் தீர்க்கத் தம்மாலியன்ற நடவடிக்கைகளை எடுத்து அரசாங்கத்தோடும் ஜனுதிபதியோடும் வாதாடிவரும் தலைவர்களையும் சாட முற்படுகின்றனர். தமிழ்மாணவருக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலகின்முன் நிரூபிக்கக்கூடியவகையில் புள்ளி விபரங்களைத் தேடிநிற்கிருேம், கிடைத்தவுடன் அதை முன்வைத்து எந்தெந்த வகையில்போராட வேண்டுமோ போராடத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆயத்தமாயிருக்கிறது என்பதை மாணவருக்கும் பெற்ருேருக்கும் இலட்சிய இதயங்கள் விளக்கிக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## அண்ணன் அமிர்

## யு. என். பி. ஆட்சியில் பஞ்ச வேலை!

10-3-81ல் வவுனியா கச்சேரியில் அரசாங்க அதிபர், வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர், உதவி அரசாங்க அதிபர்கள், மற்றைய பல்வேறு இலாகா தலைமை அதிகாரிகள் பங்குபற்றிய கூட்டத்தில் இம் மாதம் 23ம் திகதி தொடக்கம் வவுனியாமாவட்டத்தில் பஞ்ச நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. இத்ற்கு ஒரு மாதத்திற்கு 15 லட்சம் ரூபா தேவையென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன இலாகா பெருந்தெருக்கள் திணைக்களம், உள்ளூராட்சி உதவிஆணையாளர், கமநல சேவை உதவி ஆணையாளர் இவர்களினல் இவ்வாண்டு வவுனியா மாவட்டத்தில் பரவலாக்கப்பட்ட நிதித் திட்டத்தின் மூலம் செய்யப்பட இருக்கின்ற மண்வேலை, அகலக்காடு துப்பரவாக்குதல் போன்ற வேலைகள்யாவும் அவ்வப்பகுதி கிராமமுன்னேற்றச் சங்கங்கள் மூலமாக ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட்டு பொது மக்களுக்கு வேலைவாய்ப்புவசதி ஏற்படுத்தக் கூடிய வகையில் செயல்பட வேண்டுமெனவும் தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்ற வீதிகள், குடியேற்றத் திட்டங்களில் உள்ள வீதிகள், பெருந்தெருக்கள் திணைக்களத்தின் கீழ் உள்ள கிராமப்புற வீதிகளை திருத்தும் வேலைகளுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும், என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1979 - 80 காலபோக நெல் வேளாண்மை, பருவமழை, குறைந்ததினல் பாரதூரமாக பாதிக்கப்பட்டதின் காரணமாகவே வவுனியா மாவட்டத்திலுள்ள 14,000 க்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு எதிர்வரும் காலபோக வேளாண்மைக் காலம்வரை பஞ்சநிவாரண வேலைவாய்ப்பு சமூகசேவை அமைச்சினல் கொடுக்கப்பட வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## துட்டகைமுனு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் வடபகுதியிலே உடனே செய்யப்பட வேண்டிய பதினெரு அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துமாறு சீநோர் அபிவிருத்தி ஸ்தாபனத்துக்கு எழுதினுர். எனினும் அந்த சீநோர் இன்றுவரை எந்தத் திட்டத்தையும் செயற்படுத்தவில்லையே! இந்தப் புறக்கணிப்பை ஊர்காவற்றுறை பா. உ. மீண்டும் சென்ற ஆகஸ்டு மாதத்தில்பாராளுமன்றத்தில் உங்களுக்குச் சுட்டிக்காட்டிய பொழுது நீங்கள் கூறியது என்ன? அடிக்கடி யாழ்ப்பாணம் வரும் நீங்கள் இந்தப் பதினெரு அவசர அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றிவிட்டு வாருங்கள்!

உங்கள் அமைச்சு இலங்கையிலுள்ள மீனவர்களுக்கு கட்டிக்கொடுத்த வீடுகளில் வடபகுதியிலே மீனவர்களுக்கு எத்தனை வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன? 25% மீனவர்கள் வாழும்வடக்கில் 5% வீடுகளாவது கட்டப்பட்டுள்ளனவா?

(தொடரும்)

## கற்குடாத் தொகுதியில் சுவரொட்டிமயம்!

கற்குடாத் தொகுதியில் செங்கலடி, சிற்ருண்டிகுடி, வாழைச்சேனை போன்ற இடங்களில் எமக்கு வேண்டாம் சிங்கப்பூர் எமக்கு வேண்டுவது விலைகுறைப்பு; ஜே. ஆர். சிங்கப்பூரில் நாமோ ஈட்டிக்கூரில் அரிசி, பாண் வேண்டும் ஹொண்டா, யமாஹா வேண்டாம்; ஊழிக் கூத்துப்போதும் நிறுத்து; எட்டுஇருத்தல்வேண்டாம் எட்டு அவுண்ஸ்சாவதுதா. என்பது போன்ற சுவரொட்டிகள் பெரிதாக ஒட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசதுரையின் எட்டுச்சுரைக்காய்!

தமிழ் மொழி அமுலாக்கலுக்கு ஒருதனி அமைச்சையேஏற்படுத்தியிருக்கிறோம் என உள்நாட்டு மந்திரி தேவநாயகமும் எனது அமைச்சின்கீழ் இந்நாட்டிலே தமிழ்மொழி உரிமைகள் அனைத்தும் சரிவர வழங்கப்படுகின்றன என்று தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் இராசதுரையும் மாறிமாறிச் சொன்னாலும் நடைமுறையில் தமிழ்மொழி பிரதமர் பிரேமதாசாவின் அமைச்சில் கூட புறக்கணிக்கப்படுகின்றது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

இதுசம்பந்தமாக, காவலூர் பா. உ. கா. பொ. இரத்தினம் பாராளுமன்றத்தில் (6-8-80ல்) பின்வரும் கேள்வியைக் கேட்டிருந்தார்.

புதிய அரசியலமைப்பில் தேசிய மொழியாகத் தமிழுக்கும் கொடுக்கப்பட்ட உரிமைகளைநடைமுறைப்படுத்துதற்கு அவரது (இராசதுரையினது) அமைச்சு எடுத்த நடவடிக்கை என்ன? இன்றுவரை இந்த உரிமைகள் பொய்யாய் பகல் கனவாய் பழங்கதையாகப் போகும் நிலைமையிலிருக்கின்றன... நடவடிக்கைகள் எடுக்கப்படாமையிருந்தால், விரைவாக என்ன நடவடிக்கைகளை அமைச்சர் எடுக்கப் போகின்ருர் என்பதைக் கூறவேண்டும்.

காவலூர் எம்.பியின் இந்தக் கேள்விக்கு பதில் தந்த அமைச்சர்இராசதுரை அமைச்சுக்கள், திணைக்களங்கள் கூட்டுத் தாபனங்கள் முதலியவற்றுக்கும் தமிழ் உரிமைகளை நடைமுறைப் படுத்தல் குறித்து வழிப்படுத்தல் உரைகளை அனுப்புதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. தேவையான வழிப்படுத்தலுரைகளை வெளியிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று பதிலளித்திருந்தார்.

## பாராளுமன்றத்தில் பண்டிதர் சாட்டை!

திரு. இராசதுரை இந்தப் பதிலை அளித்து ஒருமாதத்தின் பின்னும் எதுவும் நடைபெருத நிலையில் காவலூர் பா.உ. மீண்டும் பாராளுமன்றத்தில் (5-9-80ல்) இதைப்பற்றி வினவிய போது, 'மிகஅண்மையில் இது கவனிக்கப்படும்' என வாக்குறுதிப் புகழ் அமைச்சர் வாய்ப்பேச்சால் சமாளித்தார்.

ஆனல் தொடர்ந்தும் எதுவும் நடைபெருத நிலையில் 3. 3. 81ல் பாராளுமன்றத்தில் காவலூர் பா.உ.பேசும்போது தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சு தொடங்கிய காலந் தொடக்கம், அந்த அமைச்சு தமிழ் உரிமைகளை நடைமுறைப் படுத்துதற்கு சுற்றறிக்கைகள், பணிப்புரைகள் எவற்றையும் விடவில்லை என்பதை அமைச்சர் (இராசதுரை) அறிவாரா? இக்குறையைத் தீர்க்க எப்பொழுது நடவடிக்கைஎடுப்படும் என்ற கேள்வியை எழுப்பினர்.

இதற்குப்பதில்இறுத்ததமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு, ஏற்ற வழிகாட்டல்களை வழங்குவதன் நிமித்தம் அமைச்சுக்களின் செயலாளர்கள் திணைக்கள கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்புவதற்காக ஒருவரைவுச் சுற்று நிரும்பதயாரிக்கப்பட்டுள்ளது. இச் சுற்றுநிருபம் இப்போது அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என பழைய பல்லவியைப்பாடி தட்டிக்கழிக்க முனைந்ததைக் கண்ட காவலூர் பா. உ. 6-8- 80ம் திகதி பாராளுமன்றத்தில் இந்த வழிப்படுத்தலுரைகளை அனுப்புதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதென முதல் நாள் கேட்கப்பட்ட கேள்விக்கும் அன்று கேட்கப்பட்ட கேள்விக்கும் இரண்டுதரம் கூறப்பட்டது. இப்பொழுது மீண்டும் அமைச்சர் அவையின் அங்கிகாரம் ஏன் தேவை? அமைச்சரவையை அடிக்கடி இழுப்பதன் மர்மம் யாது? அமைச்சர் இராசதுரை அவர்களே! மறுமொழி கூறுங்கள்.

1978ல் நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பிலுள்ள தமிழ்உரிமைகளைநடைமுறைப் படுத்துமாறு பணிக்கும் சுற்றறிக்கையினை முப்பதுமாதங்கள் கழிந்தும் இன்னும் வெளியிடாமல் தட்டிக்கேட்கும்பொழுதெல்லாம் சாக்குப் போக்குச் சொல்லும் இந்த அரசாங்கம் தமிழர்களின் பிரச்சனைகளைத் தீர்க்கும் என்று எண்ணுகிறவர்கள் இலவுகாத்த கிளியின் ஏமாற்றத்துக்கே ஆளாவார்கள்.

மயிலே மயிலே இறகுதா என்ருல் தருமா? போராடாமல் உரிமைகளைப் பெறமுடியாது என அமைச்சர் இராசதுரைக்குச் சரியான சாட்டையடி கொடுத்தார்.

## உத்தமர் ஜே. ஆர். ஆட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரியணையிலிருந்து ஜே. ஆரை அகற்றுவதோ அல்லது சிறிமாவின் கையில் செங்கோலைக் கொடுப்பதோ தமிழர் விடுதலைக் கூட்டணியின் நோக்கமல்ல, என்று தலைவர் அமிர் பாராளுமன்றத்தில்தெளிவாக எடுத்துச் சொன்ன பிறகும் கூட- தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து சிறீலங்கா சுதந்திரக்கட்சி நாட்டைப் பிரிக்கத் திட்டம் தீட்டுகின்றது என்பது போன்ற ஒரு கருத்தை ஜே. ஆர். பரப்பிவருவதன் மர்மம் என்ன?

அடுத்த பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி பீட மேறுவதைத் தடுத்தே ஆகவேண்டும்மென் பதில் தீவிரமாக இருக்கும் ஜே. ஆர்-- சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் தமிழர்விடுதலைக்கூட்டணிக்கு மிடையே ஓர் இரகசியஒப்பந்தம்செய்யப் பட்டிருக்சிறதா எனக் கேள்வி எழுப்பியதன் மூலம் தனது ஆசையை நிறை வேற்றிக் கொள்ள விரும்புகின்ருரா?

கஹவத்தையிலும் யாப்பகூவயிலும் சிறிலங்கா ஜனதிபதி ஜே. ஆர். நிகழ்த்திய பேச்சுகள் இவ்விதம் எத்தனையோ விதமான எண்ணங்களையும் உணர்வுகளையும் தமிழ்மக்கள் மனத்தில் சிருட்டித் வருகின்றன.

இதனல் மீண்டும் ஒரு 1977 ஆவணியை எதிர்நோக்க வேண்டிவருமோ என்ற பீதி அவர்களின் மனத்தைக் இப்போதே ஆட்டிப்படைக்கத் துவங்கிவிட்டது.

அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தை திரைபோட்டு மறைக்க-- அப்பாவித் தமிழர்கள்தானு கிடைத்தார்கள் என்று அவர்கள் விடும் பெருமூச்சு தமிழ் நாட்டிலும் சர்வதேசஅரங்கிலும் அவர்களுக்கு பெருத்த அனுதாபத்தையும் ஆதரவுணர்வையும் திரட்டித் தரும் என்பதில் ஐயமில்லை என்றே இன்றைய இலங்கை அரசியல் நிலையைக் கூர்ந்து அவதானிப்பவர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்ருர்கள்.

## தலைநகர்மாற்றம்!

தமிழ் நாடு அரசாங்கம் தலைநகரத்தை சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் இடையே உள்ள ஓர் இடத்துக்கு மாற்றுவதற்கு ஆலோசித்து வருகின்றது. இப்பாரிய முயற்சிக்கு மத்திய உதவி அவசியம் தேவைப்படுகிறது என்று மத்திய அரசு அமைச்சர் திரு. ராஜசிம்மன் தெரிவித்தார்.

இதற்கு 400 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப் பட்டுள்ளது.

## தமிழர்களின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

த. வி. கூட்டணி இயக்கத்தை ஆதரிப்பவர்களாக உள்ளனர்.

✻ நாம் யாவரும் பூரண சுதந்திரமாக வாழவேண்டும்.

✻ விடுதலையை நாடிநிற்கும் தமிழ் தேசிய இனத்தின் அங்கமான ஒவ்வொரு மனிதனும் பூரண மனித உரிமை பெற்றவராக வாழ வேண்டியது அவசியம்.

✻ சாதி அடக்கு முறைக்கு சாவுமணி அடிக்க வேண்டும் மக்களிடையே சமத்துவம்' சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய வற்றை வளர்க்க நேரிடும்.

எங்கள் தமிழ்தேசிய இனத்தின் அபிலாசைகளை அங்கீகரித்து அதற்கேற்ப செயல்படவும் ஒரேஒரு வழி த. வி. கூட்டணியை ஆதரிப்பதே என்று இனறைய இளைஞர் சமுதாயம் நம்பிக்கை தெரிவிக்கிறது. எனவே தான் (25-3-81) வட்டுக்கோட்டை தொகுதி த. வி. கூட்டணி கிராம யாத்திரையின் போது அங்கு சென்ற தலைவர்களுக்கும், தொண்டர்க்கும் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் அங்கு இரண்டு இடங்களில் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி நிற்சாமப்பகுதியில் த.வி.கூட்டணியின் செல்வாக்கையும் பலத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. தமிழ் ஈழ தமிழர் யாவரும் இதை மன மகிழ்ச்சியுடன் அறிய வேண்டியது அவசியமே.

இரா. அருளநேசன்
இளைஞர் முன்னேற்றச் சங்கம்
நிற்சாமம்
சங்கானை

## தவருன பிரசாரத்துக்கு தமிழர்செவிசாய்க்கலாகாது

### கிராமயாத்திரைக் கருத்தரங்கில் கிளிநொச்சி பா. உ. பேச்சு!

''ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின்போது, தமிழ்ஈழகோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தால், நிச்சயம் அது கிடைத்திருக்கும். சிங்களத் தலைவர்கள் மீது தமிழ்த்தலைவர்கள் வைத்த நம்பிக்கையினுல் அன்று அதனை அவர்கள் கோரவில்லை''

கிளிநொச்சித் தொகுதிக்கான கிராமயாத்திரையினை பளையில் ஆரம்பித்துவைத்து, கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி உரையாற்றும்போது இவ்வாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது;

தமிழர் விடுதலைக் கூட்டணியும், எமது தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் தமிழ்ஈழக் கோரிக்கையினை கைவிட்டு விட்டார்கள் என்று சிலர் கூறி வருவதில் எவ்வித உண்மையுமில்லை தமிழ்ஈழக்கோரிக்கை இந்நாட்டில் தமிழினம் 30 வருடங்கள் அனுபவித்த துன்பங்கள், வேதனைகளின் விளைவாக பல கல்விமான்கள் அரசியல்வாதிகள் பொதுமக்கள் ஆகியோர் சேர்ந்து எடுத்த முடிவு ஆகும். அதனை எவரும் கைவிடமுடியாது.

ஆங்கிலேயர் இந்நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கிவிட்டுச் செல்ல முயன்றபோது எமது தமிழ் இராச்சியத்தினை திருப்பிக் கேட்டிருந்தால், தந்துவிட்டுச் சென்றிருப்பார்கள். எமது தலைவர்கள் அன்று சிங்கள மக்களோடு சேர்ந்து வாழலாம் என எண்ணியிருந்தார்கள். முப்பது வருடகால அனுபவம் அது ஒரு போதும் நடக்கமுடியாதென்பதை உணர்த்தியிருக்கிறது.

மற்றவர்களின் வதந்திகளை தமிழினம் நம்பாது தொடர்ந்தும் கூட்டணியின் அமைப்பின் மீது நம்பிக்கை வைத்து, என்ருே ஒருநாள் விடுதலை அடைவோம், அல்லது வீரஞகை மடிவோம் என சுதந்திரத்திற்காக உழைப்போமாக'' என்ருர்.


தென்னகத்தில் மிகுந்த பரபரப்பையூட்டி
வெற்றிவிழாக் கொண்டாடிய
"வெள்ளி விழா" வண்ணச் சித்திரம்

சாந்தி -(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி. ப. 2-15, 6-00,
இரவு 9-30

சரத்பாபு, சுமலதா, சுந்தரராஜன்,
எம். என். ராஜம்
ஆகியோர் நடித்த
பி. எஸ். வீரப்பா அளிக்கும்....

திசை மாறிய பறவைகள்
(முற்றிலும் மாறுபட்ட, திசை திருப்பமான கதை)







உதயசூரியன் வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்டுயாழ்.புனித வளன் கத்தோலிக்கஅச்சகத்தில் 20-3-81ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org